பூங்கொடி
பதிப்பகம்

# வந்தே மாதரம்

[வரலாறு]

ம.பொ.சிவஞானம்

# வந்தே மாதரம்

(வரலாறு)

சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர் :: சென்னை-600 004.

முதற்பதிப்பு: மே, 1977.
உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூபாய் இரண்டு

அச்சிட்டோர்:
பிரபு பிரிண்டிங் ஹவுஸ்
48/42, வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

# முன்னுரை

இந்திய விடுதலைப் போரின்போது பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் இயற்றப்பட்ட "வந்தே மாதரம்" தேசிய கீதமானது நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பட்டது. "வந்தே மாதரம்" என்னும் மந்திரச் சொல் விடுதலை ஆர்வத்தை எழுப்பும் கோஷமாகவும் பயன்பட்டது. அது பற்றிய வரலாறாகவே இச்சிறு நூல் என்னால் எழுதப் பெற்றது. இத்துறையில் வெளி வரும் முதல் நூல் இது என்றே நினைக்கிறேன்.

வந்தே மாதரம் கீதத்தின் வரலாறு பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் மிகவும் சிரமம் இருந்தது. எனினும், விடுதலைப் போரில் ஒரு தலைமுறைக் காலம் ஈடுபட்டிருந்தவனாதலால், எனது நினைவிலிருந்தவற்றைக் கொண்டும், அரசு ஆவணங்களைப் பயன்படுத்தியும் இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

இதனை, பூங்கொடிப் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையா சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார். அவருக்கு எனது பாராட்டு.

இதுபோன்ற வரலாற்று நூல்களைத் தமிழ் மக்கள் தவறாமல் வாங்க வேண்டும். அப்போதுதான் தமிழில் தகவல் நூல்களை வெளியிடுவதற்கான உற்சாகம் பதிப்பகங்களுக்கு ஏற்படும். வந்தே மாதரம் மந்திரத்தை சொல்லித்தான் என் வாழ்நாளில் முதன் முதலில் நான் சிறைப்பட்டேன். அந்த மந்திரம் பற்றிய வரலாற்றைத் தமிழில் எழுதுவதற்கும் பேறு பெற்றதற்காக மகிழ்ச்சி யடைகிறேன்.

ம. பொ. சிவஞானம்

## பாசறைக் கீதம்!

உலகில் சுதந்திரமாக வாழும் ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனித் தேசீய கீதம் உண்டு. அந்தக் கீதம் அரசியல் சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாட்டிலுள்ள அனைவராலும் மதிக்கப்படுகிறது. மதிக்க மறுப்பது சட்ட விரோதமாகும்; தண்டனைக்குரிய குற்றமும் ஆகும்.

தேசீய கீதமானது தயாரிக்கப்படுவது அன்று. ஒரு அநீதியை எதிர்த்து அல்லது அன்னியருடைய ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழும்போது அதனைப் பிரதிபலிக்கும் வகையில் இயற்கையாகத் தோன்றுவது. இத்தகைய கீதங்களே பெரும்பாலான நாடுகளில் தேசீய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தேசத்தைப் பற்றிப் பாடப்படும் ஒவ்வொரு பாட்டும் தேசீய கீதம் ஆகிவிடுவதில்லை யென்பது இதனால் உணரப்படுகிறது.

அவையனைத்தும் நாட்டுப்பற்றை வளர்க்கப் பயன்படுத்தப்படும். அவற்றுள், அரசாங்க சட்ட மூலம் ஏற்றுக் கொள்ளப்படும் பாடல்தான் தேசீய கீதமாகப் பயன்படுத்தப்படும். ஹாலந்து, பிரிட்டன், ஸ்பெயின், டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்காட்லாந்து, போலந்து ஆகிய நாடுகள் 19 ஆம் நூற்ருண்டுக்கு முன்பே அரசியல் சட்டபூர்வமாக தேசீய கீதத்தைப் பெற்று விட்டன. மற்ற நாடுகள் 19 ஆம் நூற்ருண்டிலும், 20 ஆம் நூற்ருண்டிலுமே பெற்றன.

பிரிட்டிஷ் தேசீய கீதமான "ஆண்டவன் அரசரைக் காப்பாராக!" என்பது, ஹென்றி காரி என்பவரால் இயற்றப் பெற்றது என்று சொல்லப்படுகிறது. இந்தப் பாடல் பிரிட்டிஷார் இந்தியாவை ஆட்சி புரிந்த காலத்திலே இங்கும் தேசீய கீதமாக திணிக்கப் பெற்றிருந்தது. ஆனால், தேச விடுதலையை விரும்பியவர்கள் இந்தப் பாடலுக்கும் மதிப்பளிக்க விரும்பவில்லை.

தேசீய கீதத்திற்கெனத் தனியாக சந்தம் அமைக்கப்படுவதும், வேறு சந்தங்களில் அதனைப் பாடக் கூடாது என்பதும் உலகில் வழக்கமாக இருந்து வருகிறது. ஒரு நாட்டின் தேசீய கீதத்திற்குரிய சந்தத்தை வேறு நாடுகள் ஏற்றுக் கொள்வதும் உண்டு. பிரிட்டிஷ் தேசீய கீதத்தின் சந்தத்தையே ஜெர்மனி, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் தத்தம் தேசீய கீதத்திற்கு அமைத்துக் கொண்டுள்ளன. உலக நாடுகளிலுள்ள தேசீய கீதங்களிலே பிரான்ஸ் நாட்டில் மார்ஸலேஸ் என்னும்



தேசீய கீதமே மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கீதம் பிரான்ஸ் நாட்டில் தோன்றிய புரட்சியிலே பூத்ததாகும். அமெரிக்க தேசிய கீதமானது அமெரிக்க நகரம் ஒன்றை பிரிட்டிஷார் தாக்குவதைக் காணப்பொருத பிரான்ஸிஸ் காட் கீ என்பவரால் அந்தத் தாக்குதல் நடைபெற்ற 1816ல் இயற்றப் பெற்றதாகும்.

## இந்தியாவின் தேசிய கீதம்

கவி ரவீந்திரநாத் தாகூர் புனைந்த "ஜன கண மன" எனத் தொடங்கும் வங்க மொழிப் பாடல் 1950 ஜனவரி 26 முதல் இந்தியாவின் தேசிய கீதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு முன்பு, பங்கிம்சந்திர சாட்டர்ஜி புனைந்த "வந்தே மாதரம்" எனத் தொடங்கும் பாடல் இந்திய தேசிய கீதமாகப் பயன்படுத்தப் பெற்றது. வந்தே மாதரம் என்பதும் வங்கமொழிப் பாடல்தான். அதனைப் புனைந்தவரும் வங்காளியே!

இந்தப் பாடல், இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலே குமரி முதல் இமயம் வரையுள்ள இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும், அனைத்து மதத்தினராலும் பாடப்பட்டது. இந்திய சமுதாயத்தை ஒன்றுபடுத்திய பெருமை இதற்கு உண்டு.

## பங்கிம் சந்திரர் வரலாறு

இதனைப் புனைந்த பங்கிம் சந்திரர், 24 பிரகண மாவட்டத்திலுள்ள காண்டாலபாரா

என்னும் ஊரில் 27—6—1838ல் பிறந்தார். குலீன அந்தண மரபினர். இவருடைய தந்தையான யாதவ சந்திரர் மேதினிபுரத்தில் டெபுடி கலெக்டராக இருந்தார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் முதன் முதலாகப் பட்டம் பெற்ற இந்தியர் இருவருள் இவரும் ஒருவர். முதலில் டெபுடி மாஜிஸ்திரேட்டாக வேலையில் அமர்ந்து, பின்னர், டெபுடி கலெக்டராக உயர்த்தப்பட்டார். இவருடைய இலக்கியங்களில் பெரும்பாலானவை இவர் உத்தியோகம் வகித்த காலத்திலேயே இயற்றப்பட்டவை. வந்தே மாதரம் பாடலைத் தன்னுள் கொண்ட ஆனந்தமடம் நாவலை இயற்றியபோது இவருக்கு வயது 43. தமது 53 ஆவது வயதில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். 8—4—1894ல் காலமானார்.

## ஆனந்த மடம்

பங்கிம் சந்திரர் அவர்கள் 1882ல் இயற்றிய "ஆனந்த மடம்" நாவலில், வங்க மாதாவை வணங்கும் பாடலாக, "சந்தானங்கள்" என்ற இந்து சந்நியாசிகள் வந்தேமாதரம் பாடுகின்றனர். ஆனந்த மடம் நாவல் படைப்பதற்கு முன்பே 1876லேயே வந்தே மாதரம் பாடலை இயற்றிவிட்டார் பங்கிம் சந்திரர். அந்தக் காலத்திலிருந்து கணக்கிட்டுத்தான் வந்தே மாதரம் பாடலுக்கு நூற்றாண்டு நிறைவு விழா 1976 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

1882ல் ஆனந்த மடம் நாவல் இயற்றப்பட்டிருப்பினும், அதிலுள்ள வந்தே மாதரம் பாடல்



1906–ஆம் ஆண்டில்தான் கல்கத்தாவில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையால் இந்தியா முழுவதற்குமான தேசீயக் கீதமாக ஏற்கப்பட்டது. அந்தக் காங்கிரசிலே, கவி ரவீந்திரநாத் தாகூர், தாமே இசை அமைத்து, வந்தே மாதரம் பாடலைப் பாடினார்.

வந்தே மாதரம் பாடலில் "ஏழு கோடி மக்களைக் கொண்டவள் நீ" என்று வங்க மாதா வருணிக்கப்படுகிறாள். அந்தப் பாடல் புனையப்பட்டபோது, அஸ்ஸாமும் ஒரிசாவும் கலந்த பெரிய வங்காளம் இருந்தது என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

## வங்கப் பிரிவினை

1905ல் அப்போதைய பெரிய வங்காளத்தை மத அடிப்படையில் கிழக்கு மேற்காகத் துண்டாடினார் வைசிராய் லார்டு கர்சான். ஆம்; அப்போது வங்காளத்தில் உருவாகி வந்த தேசிய எழுச்சியை, விடுதலை ஆவேசத்தை அழித்தொழிக்கவே, லார்டு கர்சான், 'முஸ்லிம் வங்காளம்' என்றும், 'இந்து வங்காளம்' என்றும் அமையும் வகையில் கிழக்கு மேற்காக வங்காளத்தைத் துண்டாடினார். இந்தப் பிரிவினையை வங்காள மாநிலத்தின் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருமனப்பட்டு எதிர்த்துப் போரிட்டனர். அந்த எதிர்ப்புக்கு வலுத்தேடும் பொருட்டு, வங்க மாதா வணக்கமாகவுள்ள வந்தே

மாதரம் பாடல் காங்கிரஸ் மகாசபையால் ஏற்கப்பட்டது.

வங்கப் பிரிவினை ஏற்பட்டு, அதற்கு எதிர்ப்பும் தோன்றாமலிருந்திருந்தால், பங்கிம் சந்திரரின் பாடல் தேசியக் கீதமாக ஏற்கப்படாமற் போயிருக்கலாம். 1912ல் வங்கப் பிரிவினை ரத்து செய்யப்பட்டு விட்டதென்றாலும், அதன் பின்னரும் வந்தே மாதரம் பாடலின் மதிப்பு குறையவில்லை. 1947ல் தேசம் விடுதலை அடையும்வரை அது விடுதலை வீரர்களின் பாசறைக் கீதமாக இருந்தது. தாகூரின் ஜன கண மன தேசிய கீதமாக்கப்பட்ட பின்னரும் வந்தே மாதரம் பாடல் கைவிடப்படவில்லை. நாள்தோறும் அகில இந்திய வானொலியில் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் அதிகாரபூர்வ கீதமாகப் பாடப்பட்டு வருகிறது.

வந்தேமாதரம் பாடல் படைத்துவிட்ட வரலாறு மொழிவழி இனவுணர்ச்சிக்கும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு மிடையே அந்நாளில் முரண்பாடு இருக்கவில்லை யென்பதையே புலப்படுத்துகிறது. வங்க மாநில மாதாவை வருணித்த பாடல் பாரத தேச மாதாவை வருணிக்கும் பாடலாகவும் மாறிவிட்டதல்லவா!

## காங்கிரஸ் மாநாடு

வங்கப் பிரிவினையின்போது வங்க மொழி பேசும் மக்களிடையே தோன்றிய இன எழுச்சிதான் இந்திய தேசிய எழுச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. அப்பிரிவினையை வங்க மாநிலத்தவரின் தனிப் பிரச்னையாகக் கருதாமல், இந்தியாவின் பொதுப் பிரச்னையாக ஏற்றுக் கொண்டது காங்கிரஸ் மகாசபை. ஆம்; இந்தியாவின் நில ஒருமைப்பாட்டை—இந்திய சமுதாயத்தின் ஒற்றுமையைக் காக்க தான் கடமைப்பட்டுள்ளதுபோல, ஒவ்வொரு மொழிவழி மாநிலத்தின் நில ஒருமைப்பாட்டையும், மாநில மக்களின் இன ஒற்றுமையையும் காப்பதும் தனது கடமை யென்பதை அந்நாளில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை உணர்ந்திருந்தது. அதனாற்றான், வங்கப் பிரிவினையை எதிர்ப்பதன் மூலம் வங்க மாநிலத்தின் நில ஒருமையையும், வங்காளியரின் ஒற்றுமையையும் காப்பதற்கு முனைந்தது காங்கிரஸ். கர்சானுல் வங்காளம் பிரிக்கப்பட்ட அநீதியை எதிர்த்து வங்காள இனத்தவர் தொடங்கிய போராட்டத்தை காங்கிரசே பொறுப்பேற்று அகில இந்திய ரீதியில் நடத்தியது.



## பாரிசால் மாநாடு

1906ல் வங்காளத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள "பாரிசால்" நகரில் வங்க தேசிய இனத்தவரின் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதிலே, இந்து-முஸ்லிம்-கிறித்துவர் என்ற மத வேற்றுமையின்றி வங்க மொழி பேசுவோர் அனைவரும் ஒன்று திரண்டனர். இந்தியாவின் வரலாற்றிலே மொழி உணர்ச்சி காரணமாக முதன் முதலில் நடந்த தேசிய இன மாநாடு அதுதான் என்று சொல்லலாம்.

அந்த மாநாட்டில் வந்தே மாதரம் பாடலைப் பாடக் கூடாதென்று போலீசார் ஆணையிட்டனர். ஆணை மீறப்பட்டது. ஆம்; வங்க மாதா வணக்கப் பாடல் பாடப்பட்டது. போலீசார், மாநாட்டைக் கலைத்து, அதற்காகப் போடப்பட்ட பந்தலை ஆக்கிரமித்துக் கொண்டனர். வங்க மாநிலத் தலைவரான சுரேந்திரநாத் பானர்ஜி கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது.

வங்க தேசியத் தலைவர்களில் தலைசிறந்தவரான விபினசந்திர பாலர் 1906ல் "வந்தே மாதரம்" என்ற பெயரில் ஒரு ஆங்கில நாளிதழை நடத்தினர்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் தங்கியிருந்த இந்திய புரட்சிக்காரர்களும் "வந்தே மாதரம்" என்ற பெயரில் ஆங்கில மொழிப் பத்திரிகையொன்றை நடத்தினர். மாடம் காமா என்ற தேசபக்த வீராங்கனை அதன் ஆசிரியராக இருந்தார்.

## வந்தேமாதர கோஷம்

விடுதலைப் போராட்ட காலத்தில் தேசபக்தர்கள் நடத்தும் ஊர்வலங்களிலும், கூட்டங்களிலும் "வந்தே மாதரம்" கோஷிக்கப்படுவது வழக்கமாக இருந்து வந்தது. தேசபக்தர்களிலே சிலர் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அந்தப் பெயரை வைத்தனர்.

காங்கிரஸ் மகாசபையினுடைய வரலாற்றின் ஒரு கட்டத்திலே, அதன் கொடியில்-அதாவது



தேசியக் கொடியின் மையப் பகுதியில் "வந்தே மாதரம்" என்ற மந்திரம் பொறிக்கப்பட்டிருந்தது. இதனை, "தாயின் மணிக்கொடி பாரீர்!" என்று தொடங்கும் தமது பாடலிலே, "தாயின் மந்திரம் நடுவுறத் தோன்றும்; அதன் மாண்பை வகுத்திட வல்லவன் யானோ?" என்று கூறி, பெருமைப் படுத்துகிறார் பாரதியார்.

## இஸ்லாமியர் மனநிலை

விடுதலைப் போராட்ட காலத்தில் சட்டத்தை மீறியதற்காகத் தேச பக்தர்கள் நீதி மன்றங்களிலே தண்டிக்கப்பட்ட போதெல்லாம் வந்தே மாதரம் என்று உணர்ச்சிப் பெருக்குடன் கோஷித்து, தண்டனையை ஏற்றுக்கொண்டது கண்டவர்கள் மயிர்க் கூச்செறியத் தக்க காட்சியாக இருந்தது.

வந்தே மாதரம் பாடலை ஆனந்த மடம் நாவலில் இந்து சந்நியாசிகள் பாடுவதாக பங்கிம் சந்திரர் அமைத்துள்ளாராதலால், இந்தியர்களிலே முஸ்லிம்கள் இந்தப் பாடலை விரும்பாத நிலையும் பிற்காலத்தில் ஏற்பட்டது. பாரத மண்ணை மாதாவாக எண்ணி, அந்த மாதாவையும் தெய்வமாகக் கற்பித்துக்கொண்டு வழிபடுவதென்பது இஸ்லாம் நெறிக்கு விரோதமானதென்று அவர்கள் எண்ணலாயினர். அவர்களைத் திருப்திப்படுத்த இறைவழிபாடாக அமைந்துள்ள "அல்லாஹு அக்பர்" என்னும் கோஷத்தையும் வந்தே மாதரம் கோஷத்துடன் இணைத்தனர் தேசியத் தலைவர்கள்.

# பாரதியாரின் தொண்டு

தேசிய மகாகவியான பாரதியார், "வந்தே மாதரம்" என்னும் வங்கத் தாயின் வழிபாட்டுப் பாடல் இந்திய தேசியக் கீதமாக ஏற்கப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர். வங்க மாநிலத் தாயை வழிபடுவதற்கென்று தோன்றிய 'வந்தே மாதரம்' பாடலானது இந்திய தேசீய கீதமாக மாறுவதற்குக் காரணமாக இருந்த வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியில் பாரதியார் இரண்டறக் கலந்திருந்தார். அதனால் பங்கிம் சந்திரரின் பாடல் அவரைப் பெரிதும் கவர்ந்தது. வந்தே மாதரம் பிறந்த விதம்பற்றி 28-12-1905ல் சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "சக்கரவர்த்தினி" என்னும் மாத இதழில் பாரதியார் எழுதியுள்ளது வருமாறு:

"ஆனந்தமடம் என்ற கதையானது உண்மையாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில்



சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெரும் கலகத்தைப் பற்றியேமேற்படி நூல் விவரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774-75 வருஷத்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அநேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்றாய்க்கூடி அந்நியர்களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் கலகம் செய்யத் தொடங்கினார்கள்.

"இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங்காட்டில் ஆனந்த மடம் என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில்தோல்வியுறச் செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கியதன் பேரில் இந்த வீர சந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பவாநந்தர் வந்தே மாதரம் என்ற ஆரம்பங் கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாக பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கிறார்."

(பாரதி தமிழ்; பக்.8-9)

## வங்க மொழிப் பாடல்

"தாய்த் தேசத்தை அந்தப்பாடலில் தாய்என்று வழங்கியிருப்பது மிகவும் பொருத்த முடைத்தே." என்கிறார் பாரதியார்.

பங்கிம் சந்திரரின் நாவலிலுள்ளபடி வந்தே மாதரம் பாடல் வருமாறு:

# பாரதியாரின் தொண்டு

தேசிய மகாகவியான பாரதியார், "வந்தே மாதரம்" என்னும் வங்கத் தாயின் வழிபாட்டுப் பாடல் இந்திய தேசியக் கீதமாக ஏற்கப்பட்ட காலத்திலே வாழ்ந்தவர். வங்க மாநிலத் தாயை வழிபடுவதற்கென்று தோன்றிய 'வந்தே மாதரம்' பாடலானது இந்திய தேசீய கீதமாக மாறுவதற்குக் காரணமாக இருந்த வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியில் பாரதியார் இரண்டறக் கலந்திருந்தார். அதனல் பங்கிம் சந்திரரின் பாடல் அவரைப் பெரிதும் கவர்ந்தது. வந்தே மாதரம் பிறந்த விதம்பற்றி 28-12-1905ல் சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "சக்கரவர்த்தினி" என்னும் மாத இதழில் பாரதியார் எழுதியுள்ளது வருமாறு:

"ஆனந்தமடம் என்ற கதையானது உண்மையாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில்



சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெரும் கலகத்தைப் பற்றியேமேற்படி நூல் விவரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774-75 வருஷத்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அநேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்ருய்க்கூடி அந்நியர்களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் கலகம் செய்யத் தொடங்கினர்கள்.

"இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங்காட்டில் ஆனந்த மடம் என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில்தோல்வியுறச் செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கியதன் பேரில் இந்த வீர சந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பவாநந்தர் வந்தே மாதரம் என்ற ஆரம்பங் கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாக பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கிருர்."

(பாரதி தமிழ்; பக்.8-9)

## வங்க மொழிப் பாடல்

"தாய்த் தேசத்தை அந்தப்பாடலில் தாய்என்று வழங்கியிருப்பது மிகவும் பொருத்த முடைத்தே." என்கிருர் பாரதியார்.

பங்கிம் சந்திரரின் நாவலிலுள்ளபடி வந்தே மாதரம் பாடல் வருமாறு:

“ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம்
ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஸோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம். (வந்தே)

ஸப்த கோடி கண்ட கலகல நிநாத கராலே
த்விஸப்த கோடி புஜைர் த்ருத கர கரவாலே
கே போலே, மா துமி அபலே
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம். (வந்தே)

துமி வித்யா, துமி தர்ம,
துமி ஹ்ருதி, துமி மர்ம,
துவம் ஹி ப்ராணு; சரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமி மா பக்தி
தொமா ரேயி ப்ரதிமா கடிமந்திரே. (வந்தே)

த்வம்ஹி துர்கா தசப்ரஹரண தாரிணீ
கமலா கமலதல விஹாரிணீ
வாணி வித்யா தாயிநீ, நமாமி த்வாம் (வந்தே)

நமாமி, கமலாம், அமலாம், அதுலாம்
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ஸ்யாமலாம், ஸரலாம், ஸுஸ்மிதாம், பூஷிதாம்,
பரணீம், தரணீம், மாதரம். (வந்தே மாதரம்)

இந்தப் பாடல், பங்கிம் சந்திர பாபுவால் அவருடைய தாய்மொழியான வங்காள மொழியில் தான் எழுதப்பட்ட தென்றாலும், இதிலே சமஸ்கிருதச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருக்கின்றன. சமஸ் கிருதமும் வங்கமும் கலந்த மணிப்பிரவாள நடையில்



பங்கிம் சந்திரர் எழுதிவிட்டார் என்பது வங்க மொழி யின் தனித்தன்மையைக் காக்க விரும்பியவர்களின் குறைபாடாக இருந்தது. “வங்க மாநிலத்தைமட்டுமே தாயாகக் கருதி, அவளை வாழ்த்தி வணங்குவதற் கென்றே புனையப்பட்ட பாடலேனும் வங்க மொழி யின் தூய்மையைக் காக்க வேண்டாமா?” என்பது சமஸ்கிருதக் கலப்பை எதிர்த்தவர்களின் வாத மாகும். இவர்களின் வாதத்தை ஏற்றுத் தமது பாடலி லுள்ள சமஸ்கிருதச் சொற்களை அகற்ற மறுத்து விட்டார் பங்கிம் சந்திரர். இதுபற்றித் தமிழ்க் கவிஞ ரான பாரதியார் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

“25 வருஷங்களுக்கு முன் பங்கிம் சந்திரர் ஆனந்தமடம் நாவலைப் பிரசுரித்தபோது அந்தக் கீதத்தின் கண்ணே பெரும் பகுதி ஸமஸ் கிருதமாகவே இருந்தபடியால் அவருடைய நேயர் கள் பலர் அதைக் குறை கூறினார்கள். ஆனால் அம்மகான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்கவில்லை. எழுதி 25 வருஷங்களுக்குள் ளாக மேற்படி திவ்ய கீதம் பெங்காளத்து ஜனங்கள் எல்லோருடைய நாவிலுமிருக்கு மென்பதை அந்தக் கவியரசர் அறிந்திருந்தார் போலும்.

அதிலிருக்கும் ஸமஸ்கிருதம் வெகு எளிதாய் இருப்பதால் எந்த பெங்காளிக்கும் வெகு சுலபமாகப் பொருள் விளங்கிவிடும். அதுவுமின்றி அந்தக் கீத மானது பழமையில் முன்னேர்களால் வழங்கப் பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான ஸமஸ்கிருத பாஷை

யோடு தற்கால பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வகாலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கிறது.''

('சக்கரவர்த்தினி' மாத இதழில் 28-12-1905ல் எழுதியது)

வங்காளத்தில் பிறந்த மகாகவியால் வங்கமொழியில் புனையப்பட்ட பாடல் இந்திய தேசீய காங்கிரசால் இந்தியாவின் தேசீயக் கீதமாக ஏற்கப்பட்ட பின்னர், தமிழ்நாட்டிலே வங்கமொழி அறியாத தேசபக்தர்களாலும் அது பாடப்பெற்றது.

## தமிழ் மொழிபெயர்ப்பு

பங்கிம் சந்திரர் பாடலிலே பாரதியாருக்கு மிகுந்த கவர்ச்சியுண்டென்றாலும், புரியாத மொழியிலே உள்ள பாட்டைத் தமிழ் மக்கள் அதன் பொருளறியாமலே பாடுவதனை அவர் விரும்பவில்லை. அவருக்கிருந்த தாய்மொழிப் பற்றும் அதனை அனுமதிக்கவில்லை எனலாம். வந்தேமாதரம் பாடல் தேசபக்தியை வளர்க்கும் குறிக்கோளுடன் இயற்றப் பெற்றது. பொருள் அறியாமலே தமிழர் அதனைப் பாடினால் தேசபக்தி வளருவது எங்ஙனம்? ஆகவே, பாரதியார் வங்க மொழியிலிருந்த வந்தே மாதரம் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தர முன்வந்தார். ''ஜாதீய கீதம்'' என்னும் தலைப்பிட்டு அவர் மொழி பெயர்த்த பாடல் வருமாறு:

''இனிய நீர்ப் பெருக்கினை! இன் கனிவளத்தினை!
தனி நறு மலயத் தன்காற் சிறப்பினை !
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை ! (வந்தே)



வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை !
மலர் மணிப் புத்திகழ் மரன் பல செறிந்தனை !
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை !
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை !
முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோ ளுயர்ந் துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினை போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழிந்திடும் பொற்பினை
(வந்தே)

நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே யிதயம், நீயே மருமம் !
உடலகத் திருக்கு முயிரு மன் னீயே (வந்தே)

தடந் தோ ளகலாச் சக்தி நீ யம்மே !
சித்த நீங்கா துறு பக்தியு நீயே !
ஆலயந் தோறு மணி பெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே (வந்தே)

ஒருபது படைகொளு முமையவ ணீயே
கமல மெல் லிதழ்களிற் களித்திடும் கமலை நீ !
(வந்தே)

வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ!
போற்றி வான் செல்வி, புரையிலை, நிகரிலை;
இனிய நீர்ப் பெருக்கினை, இன் கனிவளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

பங்கிம் பாபு, தமது பாடலிலே வங்கத் தாய் பெற்ற மக்கள் 7 கோடி பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பாடலை பாரதத் தாய்க்குப் பொருந்தும் படியாகத் திருத்தியமைக்கும் பொருட்டு 'முப்பது

யோடு தற்கால பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வகாலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கிறது.''

('சக்கரவர்த்தினி' மாத இதழில் 28-12-1905ல் எழுதியது)

வங்காளத்தில் பிறந்த மகாகவியால் வங்கமொழியில் புனையப்பட்ட பாடல் இந்திய தேசீய காங்கிரசால் இந்தியாவின் தேசீயக் கீதமாக ஏற்கப்பட்ட பின்னர், தமிழ்நாட்டிலே வங்கமொழி அறியாத தேசபக்தர்களாலும் அது பாடப்பெற்றது.

## தமிழ் மொழிபெயர்ப்பு

பங்கிம் சந்திரர் பாடலிலே பாரதியாருக்கு மிகுந்த கவர்ச்சியுண்டென்றாலும், புரியாத மொழியிலே உள்ள பாட்டைத் தமிழ் மக்கள் அதன் பொருளறியாமலே பாடுவதனை அவர் விரும்பவில்லை. அவருக்கிருந்த தாய்மொழிப் பற்றும் அதனை அனுமதிக்கவில்லை எனலாம். வந்தேமாதரம் பாடல் தேசபக்தியை வளர்க்கும் குறிக்கோளுடன் இயற்றப் பெற்றது. பொருள் அறியாமலே தமிழர் அதனைப் பாடினால் தேசபக்தி வளருவது எங்ஙனம்? ஆகவே, பாரதியார் வங்க மொழியிலிருந்த வந்தே மாதரம் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தர முன்வந்தார். "ஜாதீய கீதம்" என்னும் தலைப்பிட்டு அவர் மொழி பெயர்த்த பாடல் வருமாறு:

"இனிய நீர்ப் பெருக்கினை! இன் கனிவளத்தினை!
தனி நறு மலயத் தன்காற் சிறப்பினை !
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை ! (வந்தே)



வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை !
மலர் மணிப் புத்திகழ் மரன் பல செறிந்தனை !
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை !
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை !
முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோ ளுயர்ந் துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினை போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழிந்திடும் பொற்பினை
(வந்தே)

நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே யிதயம், நீயே மருமம் !
உடலகத் திருக்கு முயிரு மன் னீயே (வந்தே)

தடந் தோ ளகலாச் சக்தி நீ யம்மே !
சித்த நீங்கா துறு பக்தியு நீயே !
ஆலயந் தோறு மணி பெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே (வந்தே)

ஒருபது படைகொளு முமையவ ளீயே
கமல மெல் லிதழ்களிற் களித்திடும் கமலை நீ !
(வந்தே)

வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ!
போற்றி வான் செல்வீ, புரையிலை, நிகரிலை;
இனிய நீர்ப் பெருக்கினை, இன் கனிவளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

பங்கிம் பாபு, தமது பாடலிலே வங்கத் தாய் பெற்ற மக்கள் 7 கோடி பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பாடலை பாரதத் தாய்க்குப் பொருந்தும் படியாகத் திருத்தியமைக்கும் பொருட்டு 'முப்பது

யோடு தற்கால பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வகாலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கிறது.''

('சக்கரவர்த்தினி' மாத இதழில் 28–12–1905ல் எழுதியது)

வங்காளத்தில் பிறந்த மகாகவியால் வங்கமொழியில் புனையப்பட்ட பாடல் இந்திய தேசீய காங்கிரசால் இந்தியாவின் தேசீயக் கீதமாக ஏற்கப்பட்ட பின்னர், தமிழ்நாட்டிலே வங்கமொழி அறியாத தேசபக்தர்களாலும் அது பாடப்பெற்றது.

## தமிழ் மொழிபெயர்ப்பு

பங்கிம் சந்திரர் பாடலிலே பாரதியாருக்கு மிகுந்த கவர்ச்சியுண்டென்றாலும், புரியாத மொழியிலே உள்ள பாட்டைத் தமிழ் மக்கள் அதன் பொருளறியாமலே பாடுவதனை அவர் விரும்பவில்லை. அவருக்கிருந்த தாய்மொழிப் பற்றும் அதனை அனுமதிக்கவில்லை எனலாம். வந்தேமாதரம் பாடல் தேசபக்தியை வளர்க்கும் குறிக்கோளுடன் இயற்றப் பெற்றது. பொருள் அறியாமலே தமிழர் அதனைப் பாடினால் தேசபக்தி வளருவது எங்ஙனம்? ஆகவே, பாரதியார் வங்க மொழியிலிருந்த வந்தே மாதரம் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தர முன்வந்தார். ''ஜாதீய கீதம்'' என்னும் தலைப்பிட்டு அவர் மொழி பெயர்த்த பாடல் வருமாறு:

''இனிய நீர்ப் பெருக்கினை! இன் கனிவளத்தினை!
தனி நறு மலயத் தன்காற் சிறப்பினை !
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை ! (வந்தே)



வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை !
மலர் மணிப் புத்திகழ் மரன் பல செறிந்தனை !
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை !
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை !
முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோ ளுயர்ந் துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினை போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழிந்திடும் பொற்பினை
(வந்தே)

நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே யிதயம், நீயே மருமம் !
உடலகத் திருக்கு முயிரு மன் னீயே (வந்தே)

தடந் தோ ளகலாச் சக்தி நீ யம்மே !
சித்த நீங்கா துறு பக்தியு நீயே !
ஆலயந்தோறு மணி பெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே (வந்தே)

ஒருபது படைகொளு முமையவ ளீயே
கமல மெல் லிதழ்களிற் களித்திடும் கமலை நீ !
(வந்தே)

வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ!
போற்றி வான் செல்வி, புரையிலை, நிகரிலை;
இனிய நீர்ப் பெருக்கினை, இன் கனிவளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

பங்கிம் பாபு, தமது பாடலிலே வங்கத் தாய் பெற்ற மக்கள் 7 கோடி பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பாடலை பாரதத் தாய்க்குப் பொருந்தும் படியாகத் திருத்தியமைக்கும் பொருட்டு 'முப்பது

கோடி மக்கள்' என்று கூறியிருக்கிறார் பாரதியார் இதுபற்றிக் கொடுத்துள்ள குறிப்பிலே,

> "முப்பது கோடி வாய் நின்னிசை முழங்கவும் – பெங்காளிப் பாஷையிலே 7, கோடி யென்றே கூறி யிருக்கின்றது. ஆனால் அது பெங்காளி மாகாணத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30 கோடி இந்தியா முழுமையின் ஜனத்தொகை."

என்று விளக்கம் தந்திருக்கிறார்.

பாரதியார், வந்தே மாதரம் பாடலைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு முன்பே ஆங்கிலத்தில் பல கவிஞர்கள் மொழிபெயர்த்திருந்தனர். அந்த ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் பார்த்துவிட்டுத்தான் பாரதியார் தமிழ் மொழி பெயர்ப்பை இயற்றினார். தமது மொழிபெயர்ப்பு பற்றிப் பாரதியார் கூறுவதாவது:

> "பலரால் இக் கீதத்திற்கு எழுதப்பட்டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பானது பெங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அநுசரித்தே தமிழ்மொழி பெயர்ப் பெழுதியிருக்கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவு பட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய பங்கிம் பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்"



## பாட்டைப் புகழும் பாட்டு

பாரதியார், பங்கிம் சந்திரர் தந்த வந்தே மாதர மந்திரத்தின் அருமை பெருமை பற்றி விரித்துரைக்கும் பாடல் ஒன்றைத் தமது தாய்மொழியான தமிழிலே புனைந்தார். இது, அவரது சொந்தப் பாடல். "வந்தே மாதரம்" என்ற தலைப்புடன் 24—2—1905 "சுதேச மித்திரன்" இதழில் வெளியானது. பாடல் வருமாறு:

ஆரியமென்ற பெரும்பெயர் கொண்டவெ
மன்னையின் மீதுதிகழ்
அன்பெனு மென்கொடி வாடியகாலை
யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே
மாணுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.

வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
மேவி நல் ஆரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மை யிருட்கணம்
வீவுற வங்கமகா
வாரிதி மீதி லெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.

காரடர் பொன்முடி வானி மயந்தரு
கங்கை வரம்பினிலும்
கன்னியை வந்தொரு தென்றிசை யார்கவி
காதல் செயா யிடையும்

வீரர்கள் மிஞ்சி விளங்கு புனமுதல்
    வேறுள வூர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
    வியந்திடு மந்திரமும்

பாரத தேச விரோதிகள் நெஞ்சு
    பதைத்திடு மந்திரமும்
பாதக ரோதினு மேதக வுற்றிடு
    பண்புயர் மந்திரமும்
வாரமுறுஞ் சுவை யின்னற வுண்கனி,
    வான மருந்தெனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
    வந்தே மாதரமே.

## பாரத தேவியின் மந்திரம்

இப்பாடலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் வந்துள்ள வரிகள் வந்தே மாதரம் பாடலின் மாண்பினை ஓதுகின்றன.

"மாணுயர் பாரத
    தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே"

என்றும்,

"வாழிந லாரிய
    தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே"

என்றும்,

"பாரத தேச
    விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரம்
    வந்தே மாதரமே!"



என்றும் வந்திருப்பது பாரதியாரின் உள்ளத்திலே வந்தேமாதரம் பாடல் எவ்வளவு அழுத்தமாகத் தைத்திருந்தது என்பதை அறிவிப்பனவாம்.

## இரண்டாவது மொழிபெயர்ப்பு

பாரதியாருக்குத் தமது மொழிபெயர்ப்பிலே மன நிறைவு ஏற்படவில்லை. அதனால், திரும்பவும் ஐந்தாண்டுகள் கழித்து மற்றொரு முறையும் வந்தே மாதரம் பாடலைத் தமிழில் மொழிபெயர்த்தார். அது வருமாறு:

**ஜாதீய கீதம்**

நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்து நன் கிலகுவை, வாழிய அன்னை! (வந்தே)
தெண்ணில வதனிற் சிலிர்த்திடும் இரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும் தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களும் நல்குவை. (வந்தே)
கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கிமுன் னிற்கவும்,
'கூடு திண்மை குறைந்தனை' என்பதென்?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை. (வந்தே)
அறிவும் நீ, தருமம் நீ, உள்ளம் நீ, அதனிடை
மருமம் நீ, உடற்கண் வாழ்ந்திடும் உயிர் நீ;
தோளிடை வன்பு நீ, நெஞ்சகத்து அன்பு நீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம், தேவி, இங்குனதே. (வந்தே)

பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னை நீ! (வந்தே)

திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை !
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற்றொ ளிர்ந்தனை, பல்பணி பூண்டனை.
இரு நிலத்துவந் தெம்முயர் தாங்குவை,
எங்கள் தாய், நின் பதங்களிறைஞ்சுவாம்! (வந்தே)

வியப்பென்னவென்றால், பாரதியாரின் இரண்டு மொழிபெயர்ப்புகளும் தமிழ் மக்களால் போற்றப்படவில்லை என்பதாகும். அவர் பிறவியிலேயே மகாகவி. அப்படிப்பட்டவரை வெறும் மொழி பெயர்ப்புக் கவியாக ஏற்றுக்கொள்ள தமிழர் முன்வரவில்லை. இன்னொரு வகையில் சொன்னால், 'வந்தே மாதரம்' என்னும் மந்திரச் சொல்லையே தலைப்பாகக் கொண்டு, அவரே சொந்தமாகத் தம் தாய் மொழியில் புனைந்த பாடல்களால் அவருடைய மொழிபெயர்ப்புப் பாடல்கள் மதிப்பற்றுப் போயின எனலாம். பங்கிம் சந்திரரின் வங்க மொழிப் பாடலின் சுவையை வென்று விட்டன பாரதியார் தமிழில் சுயமாகப் புனைந்த 'வந்தே மாதரம்' பாடல்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. தமது மொழிபெயர்ப்புப் பாடல் இரண்டிலுமே மன நிறைவு பெறாத பாரதியார் தாமே புனைந்த 'வந்தே மாதரம்' பாடல்களைப் பார்ப்போம்.



## பாரதியாரின் சொந்தப் பாடல்கள்

தாயுமானவரின் "ஆனந்தக் களிப்பு" என்னும் மெட்டில் "வந்தே மாதரம்" என்னும் தலைப்பு தந்து பாரத நாடு முழுவதையும் வணங்கும் வகையில் பாரதியார் புனைந்த பாடல் வருமாறு:

**பல்லவி**

வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம். (வந்தே)

**சரணங்கள்**

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே. (வந்தே)

ஈனப் பறையர்க ளேனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ? - பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே)

ஆயிர முண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி? - ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முட்
சண்டைசெய் தாலும் சகோதர ரன்றோ?
(வந்தே)

ஒன்று பட்டா லுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

எப்பதம் வாய்த்திடு மேனும் - நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்தே)

புல்லடிமைத் தொழில் பேணிப் - பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி. (வந்தே)

பல்லவி

வந்தே—மாதரம் - ஜய
வந்தே மாதரம்.

சரணங்கள்

ஜயஜய பாரத ஜயஜய பாரத
ஜயஜய பாரத ஜயஜய ஜயஜய (வந்தே)

ஆரிய பூமியில் நாரிய ரும்நர
சூரிய ரும்சொலும் வீரிய வாசகம். (வந்தே)

நொந்தே போயினும் வெந்தே மாயினும்
நந்தே சத்தர்உ வந்தே சொல்வது (வந்தே)

ஒன்றாய் நின்றினி வென்றா யினுமுயிர்
சென்றா யினும்வலி குன்றா தோதுவம் (வந்தே)

இந்தப் பாடலில், வந்தே மாதரத்தை "வீரிய வாசகம்" என்கிறார். 'நொந்தே போயினும், வெந்தே மாயினும் உவந்தே சொல்வது வந்தேமாதரம்' என்று



உறுதியுடன் கூறுகின்றார். "ஒன்றாய் நின்று ஓதுவோம்", "வலி குன்றாது நின்று ஓதுவோம்", "உயிர் சென்றாயினும் ஓதுவோம்" என்று பாரதியார் கூறுவது, தேசபக்த சாதியினரின் வீரத்தை வெளிப்படுத்துவதாகும்.

பாரதியார், பங்கிம் பாபுவின் வந்தே மாதரம் பாடலால் கவரப்பட்டு, தாமே சொந்தமாக வங்க மாதாவை வாழ்த்தி ஒரு பாடல் பாடினார். அது 15-9-1905 "சுதேச மித்திரனி"ல் வெளியானது. இதுதான் பாரதியார் புனைந்த முதல் பாடல் என்கிறார் திரு. பெ. தூரன். அந்தப்பாடல் வருமாறு:

அங்கமே தளர் வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுணச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனச்
செம்மை கூறிநந் தாய்ப் பெருந் தேயத்தைப்
பங்கமே பெறு மிந்நிலை நின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்கமே யென வந்தனை வாழி நீ
வங்கமே நனி வாழிய வாழிய!

கற்பகத் தருப் போலெது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினிற்
பொற்புறப் பிறந்தோம், நமக்கோர் விதம்
பொருளு மன்னிய ரீதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கர நோக்கியா
மவனி வாழ்தலா காதென நன்கிதை
வற்புறுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்கமே நனி வாழிய வாழிய!

கண்ணினீர் துடைப்பாய் புன்னகை கொள்வாய்
கவினுறும் பர தப்பெருந் தேவியே
உண்ணிகழ்ந்திடும் துன்பங் களை தியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்
பெண்ணி னெஞ்சிற் சிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுறலே யன்றோ?
மண்ணினீ புகழ் மேவிட வாழ்த்திய
வங்கமே! நனி வாழிய வாழிய

பாரதியார், "இந்தியா" என்னும் பெயரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை நடத்தினர். அதற்கு "வந்தே மாதரம்" என்னும் பெயரைச் சூட்ட முதலில் நினைத்து, பின்னர் அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டார். அதனை, அவரே கூறக் கேட்போம்:

"நமது பத்திரிகை தொடங்கும் காலத்தில் இதற்கு "வந்தே மாதரம்" என்று பெயர் வைத்துவிடலாமென்று ஆலோசித்தோம். 'தேச மாதாவை வணங்குகிறேன்' என்ற கருத்துடைய ஷ மந்திரத்தை பெயராக வைத்திருப்பதைக் காட்டிலும், மாதாவின் பெயரையே நமது பத்திரிகைக்குச் சூட்டி விடுதல் பொருத்தம் என்று ஒரு யோசனை உண்டாயிற்று. அதற்கிணங்கவே நமது பத்திரிகைக்கு "இந்தியா" என்ற பரிசுத்த நாமம் அளிக்கப் பெற்றது."

வந்தே மாதரம் என்னும் கோஷத்தின் பொருளை உணராமல், உணர்ந்தாலும் அதில் நம்பிக்கை வைக்காமல் வெறுமனே உணர்ச்சி கொண்டு கோஷிப்ப



தும் ஒரு வழக்கமாக பாரதியார் காலத்திலே இருந்திருக்கிறது. இத்தகைய போலிகளை "நடிப்புச் சுதேசிகள்" என்னும் தலைப்பைக் கொண்ட பாட்டிலே,

"தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே!
வந்தே மாதரம் என்பார்!

"சிந்தையிற் கள் விரும்பிச்
சிவசிவ என்பதுபோல்
வந்தே மாதர மென்பார்—கிளியே!
மனத்தி லதனைக் கொள்ளார்

"கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்தில் கொள்ளா ரடீ—கிளியே!
நாளில் மறப்பா ரடீ!"

என்று கூறுகின்றார்.

பாரதியார் அடையாளம் காட்டும் 'நடிப்புச் சுதேசிகள்' அவர் காலத்தில் பாரதம் முழுவதிலுமே பரவியிருந்தனர். ஆம்; உண்மைச் சுதேசிகள் மத்தியிலே அவர்கள் மறைந்திருந்தனர். அவர்களைத் தான் மக்களுக்கு அடையாளம் காட்டிப் பாடினர் பாரதியார்.

சுப்பிரமணிய பாரதியார், தம்முடைய உரை நடைக் கட்டுரை—கடிதங்களின் தொடக்கத்திலே பிள்ளையார் சுழி போன்று "வந்தே மாதரம்" என்னும் சொல்லைப் பொறித்துள்ளார். உரைநடையில்

தாம் எழுதிய ஒரு கட்டுரையின் இறுதியிலே "ஓம்‡ "வந்தே மாதரம்" என்று வரைந்துள்ளார்.

பாரதியார், "ஆறிலொரு பங்கு" என்னும் பெயரில் தாம் புனைந்துள்ள சிறுகதையிலே, 'வந்தே மாதரம்' என்னும் பெயரில் ஒரு பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

நெல்லை மாவட்ட வாசியான பாரதியாருக்கு, தமிழ்ப் புலவர்கள் வந்தே மாதரம் கிளர்ச்சியில் அதிகமான அளவில் ஈடுபாடு காட்டவில்லையென்று ஒரு குறை இருந்ததாகத் தெரிகிறது. இதற்கு விலக்காக, புலவர்களிலே ஒன்றிருவர் தேசீயக் கிளர்ச்சியில் நாட்டஞ் செலுத்திய போது, தம் இதயத்திலே எழுச்சி பொங்க அவர்களை அவர் பாராட்டியிருக்கிறார். இதோ. சான்று:

"விவேக பாநு" பத்திரிகை நமது பார்வைக்கு வந்தது. அதிலே சில விஷயங்களைப் படித்துப் பார்த்தவுடனே நமக்கு ஈசனிடம் அடங்காத நன்றி அறிவு பொங்குவதாயிற்று. இலக்கண விஷயங்களிலே நாளெல்லாம் களித்த பண்டித சிரோன் மணிகள் இப்போது ராஜாங்கத்தாரின் செலவு கணக்குகளிலே சிரத்தை எடுக்கத் தொடங்கி விட்டார்கள். திருவாடுதுறை ஆதீன வித்வானும், மதுரை தமிழ் சங்கத்து சைவநூற் பரிசோதகருமாகிய ஸ்ரீசுப்



பிரமணியக் கவிராயர் சுதேசீய முயற்சியைப்பற்றிநேர்த்தியான ஒரு வியாசமெழுதி இருக்கின்றார். ராஜாங்க விவகாரங்களிலேயே நாட்களையெல்லாம் செலவிட்ட விற்பன்னர்கள் கூட இத்தனை நன்றாக எழுத மாட்டார்கள்.

"சுதேசீய முயற்சியிலே அன்பில்லாதவர்களை இப்பண்டிதர் காகங்களுக்கும், எறும்புகளுக்கும் கடைப்பட்டதாக எழுதுகின்றார்.

"இவர் இம்மட்டிருக்க ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை (என்ற) மற்றொரு இலக்கண வித்வான் "வந்தே மாதர" மந்திரத்தைப் பற்றிய சில இனிய பாடல்கள் எழுதியிருக்கிறார். ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை மலை புரண்ட போதிலும் தமது கல்வியினின்றும் கருத்தை அகலவிடாத தன்மையினர். இலக்கண ஆராய்ச்சியே இவருக்கு முக்கிய தொழில். அதுவே இவருக்கு உயிர். இதைத் தவிர வேறொன்றையும் இவர் கவனிப்பது கிடையாது. இப்போது பாரத தேவி இவருடைய சிந்தையையும் மாற்றி விட்டாள். பாரததேவியின் தெய்வீக விழிகளினின்றும் உதிரும் கண்ணீர்கள் இவரது நெஞ்சை உருக்கி இவரது..........எமது தாய்க்கு அடிமையாக்கி விட்டன.

"இது ஆகு பெயரா? அன்மொழித் தொகையா? தொல்காப்பியத்திற்கு இவ்விடத்தில் நச்சினுர்க்கினியர் கூறிய உரை பொருந்துமா? பொருந்தாதா?" என்ற இலக்கண விவகாரங்களைச் சிறிது அகற்றி வைத்து விட்டு இந்த வித்வான்,

"வந்தே மாதரம் என்று மந்திரத்தா
லெய்தாக வரவுமில்லை.
நம்தேச மக்களுக்கு நலன் தருவதிது
போ லென்னுட்டு மில்லை"

என்று பாட்டியற்றத் தொடங்கி விட்டார். கல்வித் தாய்க்கு மட்டிலுமே, இதுவரை வழிபாடு நடத்தி வந்த இவர் இப்போது பூமித் தாய்க்குத் தொண்டு புரிவது அதைக் காட்டிலும் உயர்வாகுமென்பதை அறிந்து கொண்டார். இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது."

*('பாரதி தரிசனம்'; பக். 169—170)*

பாரதியாரின் பாடல் தொகுப்பிலே "நாட்டு வணக்கம்" என்று ஒரு பாட்டுமுளது. நாட்டின் சரித்திரப் பெருமைகளையெலாம் படிப்போருடைய - படிக்கக் கேட்போருடைய உள்ளங்களையெல்லாம் உருக்கும் வகையிலே அந்தப் பாடலில் பாரதியார் விவரித்திருக்கின்ருர். மூன்று செய்யுட்களைக் கொண்ட அந்தப் பாடலிலே ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும்,



"வந்தே மாதரம்,
வந்தே மாதரம் — என்று
வணங்கேனே?"

என்று கூறுகின்ருர்.

"சுதந்திரப் பெருமை" என்னும் தலைப்பின் கீழ் "வீர சுதந்திரம் வேண்டி நின்ருர்" என்று தொடங்கும் பாடலிலே,

"வந்தே மாதரம் என்று
வணங்கியபின்
மாயத்தை வணங்குவாரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?"

என்று இதய எழுச்சியோடு பாரதியார் பாடியுள்ளார்.

"இது ஆகு பெயரா? அன்மொழித் தொகையா? தொல்காப்பியத்திற்கு இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் கூறிய உரை பொருந்துமா? பொருந்தாதா?" என்ற இலக்கண விவகாரங்களைச் சிறிது அகற்றி வைத்து விட்டு இந்த வித்வான்,

"வந்தே மாதரம் என்று மந்திரத்தா
லெய்தாக வரவுமில்லை.
நம்தேச மக்களுக்கு நலன் தருவதிது
போ லென்னுட்டு மில்லை"

என்று பாட்டியற்றத் தொடங்கி விட்டார். கல்வித் தாய்க்கு மட்டிலுமே, இதுவரை வழிபாடு நடத்தி வந்த இவர் இப்போது பூமித் தாய்க்குத் தொண்டு புரிவது அதைக் காட்டிலும் உயர்வாகுமென்பதை அறிந்து கொண்டார். இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது."

*('பாரதி தரிசனம்'; பக். 169—170)*

பாரதியாரின் பாடல் தொகுப்பிலே "நாட்டு வணக்கம்" என்று ஒரு பாட்டுமுளது. நாட்டின் சரித்திரப் பெருமைகளையெலாம் படிப்போருடைய - படிக்கக் கேட்போருடைய உள்ளங்களையெல்லாம் உருக்கும் வகையிலே அந்தப் பாடலில் பாரதியார் விவரித்திருக்கின்றார். மூன்று செய்யுட்களைக் கொண்ட அந்தப் பாடலிலே ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும்,



"வந்தே மாதரம்,
வந்தே மாதரம் — என்று
வணங்கேனோ?"

என்று கூறுகின்றார்.

"சுதந்திரப் பெருமை" என்னும் தலைப்பின் கீழ் "வீர சுதந்திரம் வேண்டி நின்றார்" என்று தொடங்கும் பாடலிலே,

"வந்தே மாதரம் என்று
வணங்கியபின்
மாயத்தை வணங்குவாரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?"

என்று இதய எழுச்சியோடு பாரதியார் பாடியுள்ளார்.

## "வந்தே மாதரம் பிள்ளை"!

விடுதலைப் போர்க்களத்திலே வங்கப் பிரிவினை எதிர்ப்பு காரணமாக, 1905 முதல் 1968 வரை வடக்கே வங்க மாநிலத்திலும், தெற்கே திருநெல்வேலி மாவட்டத்திலும் மக்களிடையே மகத்தான அளவில் தேசீய எழுச்சி ஏற்பட்டது. விடுதலை ஆர்வமானது ஆவேசமாக மாறியது இந்தக்காலத்தில்தான். "தேசீயம்" ஒரு புதிய மதமாகவே உருவெடுத்தது.

### மூல மந்திரம்

இந்தப் புதிய மதத்தோடு தங்களைப் பிணைத்துக் கொண்ட இந்தியர்களுக்கெல்லாம் "வந்தே மாதரம்" என்ற வாசகமானது முத்திக்கு ஓதப்படும் மூலமந்திரம் போன்று ஆகி இருந்தது.

சைவர்களுக்கு "நமச்சிவாய" என்பதும், வைணவர்களுக்கு "நாராயணாய" என்பதும் ஆன்ம விடுதலைக்கான மூலமந்திரங்களாகி விட்டன. அதுபோல



தேசீய மதத்தாருக்கு "வந்தே மாதரம்" அரசியல் விடுதலைக்கான தாரக மந்திரமாக இருந்தது.

தேசபக்தர்களின் குடும்ப நிகழ்ச்சிகளிலேயும் வந்தே மாதரம் புகுந்து கொண்டது. அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலேயும் கலந்து கொண்டது. தேசபக்தியுள்ள குடும்பங்களில் நடைபெறும் திருமணங்களிலே மணமகள் கழுத்தில் மணமகன் தாலி அணிவிக்கும்போது, அத்திருமண அவையில் குழுமிய தேசபக்தர்கள் 'வந்தே மாதரம்' என்று கோஷிப்பது வழக்கமாயிருந்தது.

தேசபக்த நண்பர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போதும் 'வந்தேமாதரம்' என்னும் மந்திரச் சொல்லை பரஸ்பரம் சொல்லிக்கொள்வார்கள். ஆம்; "காலை வணக்கம்" (குட் மார்னிங்) என்று சொல்லிக் கொள்வதுபோல!

வந்தேமாதரம் என்ற மந்திரச்சொல்லை விடுதலை இயக்கத்தின் ஒரு பிரிவினராக விளங்கிய பயங்கரப் புரட்சியாளர்களும் அதிக உணர்ச்சியோடு பயன்படுத்தினர்கள். அதிலே அவர்கள் வெறிஉணர்ச்சியை வெளிப்படுத்தினர்கள் என்றும் சொல்லலாம். பயங்கரவாதிகள் தலைமறைவாக இருந்து கொண்டுதான் செயல்புரிந்தனர். அதனால், ஊர்வலங்களிலோ, பொதுக்கூட்டங்களிலோ வெளிப்படையாகக் கலந்து கொண்டு தேசீய மந்திரத்தைக் கோஷிக்க அவர்களுக்கு வாய்ப்பில்லை. அதனால், அவர்கள் மீது பிரிட்டிஷ் ஆட்சியானது சதி வழக்குகள் தொடர்ந்து,

விசாரணைக்காக அவர்களை நீதிமன்றங்களுக்குக் கொண்டு வந்தபோது, அங்கு "வந்தே மாதரம்" என்று அவர்கள் கோஷிப்பார்கள். அப்படிக் கோஷிப்பது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகும் என்று தெரிந்தே கோஷித்தனர். சில நேரங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்தவொட்டாதபடி இடைவிடாது கோஷித்துக் கொண்டே இருந்தார்கள்.

"வந்தே மாதரம்" விடுதலைப் போராட்ட வீரர்களின் பாசறைக் கோஷமாக மாறியது 1906ல் தான். அந்த ஆண்டிலேயே தமிழ்நாடும் அந்தத் தேசீயக் கோஷத்தை ஏற்றுக் கொண்டு விட்டது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலே வீடு தோறும் வீதிதோறும் தமிழர் வாய்தோறும் "வந்தே மாதரம்" ஒலித்தது; ஒலிக்கும்படிச் செய்தார் வ. உ. சி.

சிதம்பரனார், தம் தாய்மொழியான தமிழிடத்தும், தாய் இனத்தவரான தமிழரிடத்தும் மிகுந்த பற்றுடையவர். தமிழருடைய வரலாற்றுப் பெருமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வும் உடையவர். மொழிப் பற்றையும், அதன் வழிப்பட்ட இனப்பற்றையும் இந்திய தேசியத்தோடு இணைத்துச் செயல்படும் புதிய மரபைத் தோற்றுவித்த சான்றோர்களில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வ. உ. சிதம்பரனாரே முதல்வராவார்.

இந்தப் பெரியார், வங்கதேச மாதாவை வழிபடும் பாடலாகப் பிறந்து, இந்திய தேச மாதாவுக்கும்



உரிமையாகிவிட்ட "வந்தே மாதரம்" என்னும் பாடலைத் தமிழ்நாட்டில் பரப்ப முயற்சி எடுத்தார். இதிலே பாரதியாருக்கு அடுத்தவராக அவர் விளங்கினார்.

வ.உ.சி. தூய சைவர். சைவத்தோடு இணைந்துள்ள சித்தாந்த வேதாந்த சாத்திரங்களை பழுதறப் பயின்று, சித்தாந்த சாத்திரமாகிய சிவஞானபோதத்திற்கு உரை எழுதியவர். இவ்வளவு இருந்தும் ஒரு சைவர் என்ற வகையில் "நமச்சிவாய" என்ற மூல மந்திரத்திற்குத் தாம் தந்து வந்த முக்கியத்துவத்தை ஒரு தேசபக்தர் என்ற வகையில் "வந்தே மாதரம்" என்னும் தாரக மந்திரத்திற்கும் தந்தார்.

தூத்துக்குடிக்கு "திருமந்திர நகர்" என்றும் ஒரு பெயர் உண்டு. பிள்ளையவர்கள் இந்தப் பெயரையே தமது எழுத்தோவியங்களில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். இந்தப் பெயர் வந்ததற்கான புராண காரணம் எதுவாயினும், தமிழ்நாட்டிலே "வந்தே மாதரம்" என்னும் திருமந்திரம் முதன்முதலில் வீதிதோறும் வீடுதோறும் மக்களிலே ஒவ்வொருவருடைய நாவுதோறும் ஒலித்தது இந்த நகரில்தானதலால், இதனாலும் "திருமந்திர நகர்" என்ற பெயர் இதற்குப் பொருந்துவதெனலாம்.

1906 தொடங்கி 1908 வரை—அதாவது, சிதம்பரனார் அரசியலில் புகுந்து இரண்டு ஆயுள் தண்டனை பெற்றது வரையுள்ள 3 ஆண்டுக் காலத்தில் தூத்துக்குடிமக்கள் அவரை "வந்தேமாதரம் பிள்ளை"

என்றே அழைத்தனர். இந்தச் சிறப்புப் பெயரைச் சொன்னால்தான் மக்கள் அவரை எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது அந்த நாளிலே! இப்படி, வந்தே மாதரம் தனது சொந்தப் பெயராகிவிடும் நிலையில் வாழ்க்கை நடத்திய ஒரு தேசீயத்தலைவர் இன்னொருவர் உண்டா? ஆராய்ச்சிக்குரியதாகும்.

## தென்னக பாரிசால்

வந்தே மாதரம் என்னும் மந்திரத்தைத் தந்த வங்காளத்தின் கிழக்குப்பகுதி நகராகிய பாரிசாலுக்கு இணையென விளங்கியது அந்நாளிலே தூத்துக்குடி. அதனால், தமிழ் நாட்டின் "பாரிசால்" என்றும் அழைக்கப் பெற்றது.

வெள்ளையரான நீதிபதி பின்ஹே சிதம்பரம் பிள்ளைக்கு இரண்டு ஆயுள் தண்டனை விதித்து, தேச பக்தியையே அழித்துவிட முடியும் என்று நம்பினர். சிதம்பரம்பிள்ளைக்கு இவ்வளவு கடுந்தண்டனை விதிப்பதற்கு அந்த நீதிபதி சொன்ன காரணங்களிலே ஒன்று "வந்தே மாதரம்" என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராகத் தமிழ் மக்களைக் கோஷிக்க வைத்தார் என்பதாகும்.

சிதம்பரனாரைக் கைது செய்த திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் விஞ்ச்துரை, கைதி நிலையில் தன் எதிரே சிதம்பரம் பிள்ளையை நிற்க வைத்துக் குற்றஞ்சாட்டினர். அப்போது சிதம்பரனார் மீது அவர் சுமத்திய குற்றங்களில் ஒன்று, வெள்ளைக்காரர்களுக்



கெதிராக "வந்தே மாதரம்" என்று கோஷிக்கும்படி தமிழ் மக்களைத் தூண்டினர் என்பதாகும். இதை, பாரதியார் கவிதை வடிவில் தந்துள்ளபடிப் பார்ப்போம். கலெக்டர்,

"கூட்டங் கூடி வந்தே மாதரம் என்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்"

என்றார். சிதம்பரனார்,

"வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்;—முடி தாழ்த்துவோம்;
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ?-அவ-மானமோ?"

என்று சுடச்சுடப் பதில் கொடுத்தார்.

செந்தமிழ் நாட்டிலே தேசபக்தி விதையை முதன்முதலில் விதைத்த சிதம்பரனாருக்கு வந்தே மாதரம் என்னும் மந்திரத்தின் மீது இருந்த பக்திக்கு அவருடைய பெரும் பகையாக விளங்கிய கலெக்டர் விஞ்ச்துரையே சாட்சியம் கூறுகிறார். இந்தத் தாரக மந்திரம்பற்றி ஆங்கிலேயரான கலெக்டருக்கும் தேச பக்தரான சிதம்பரனாருக்கும் நடந்த வாக்குவாதம் ஒரு மகாகவியால் இலக்கியமாக்கப்பட்டு விட்டது.

## வெள்ளையர் பட்ட வேதனை?

சிதம்பரனார் திருநெல்வேலியில் சிறைப்பட்ட நாளிலே, தூத்துக்குடி நகரிலிருந்த வெள்ளைவணிகர்களிலே—அரசாங்க அதிகாரிகளான வெள்ளையர்

களிலே—ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் வந்தே மாதரம் என்று கோஷித்ததாக சுதேசி இயக்கத்தின் வரலாறு கூறுகிறது. வீதியில் போகும் வெள்ளையர்களையும் அப்படிக் கோஷிக்கும்படிச் செய்தனர் தூத்துக்குடி மக்கள்.

தேசபக்தர் சிதம்பரனார் கைது செய்யப்பட்டு, அவர்மீது அரச நிபந்தனை வழக்கு நடத்தப் பெற்ற போது, சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அவர் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறார். அப்போது கோர்ட்டில் நடந்த நிகழ்ச்சியை அவரே கூறக் கேட்போம்:

> பின்னுள் அவனொடு பேசிய விஞ்சுமுன்
> மன்னு நின்றேன். வழக்கினை எடுக்குமுன்
> எதிரே பார்த்தான் எதிர்த்த சுவரினில்
> கதிரே எனுமவன் கண்ணுற் கண்டான்
> "வந்தே மாதரம்" வார்த்தைகள் தம்மை.
> "அந்தோ! அந்தோ! அழி! அழி!" என்றான்.
>
> (வ.உ.சி. சுயசரிதை; பக். 75-76)

இது, கோர்ட்டிலே, மாஜிஸ்திரேட்டின் ஆசனத்திற்கு எதிரே, அவருடைய கண்களுக்குத் தெரியும்படியாக 'வந்தே மாதரம்' என்று பல இடங்களில் எழுதப் பட்டிருந்ததையும், அதைக்கண்டு மாஜிஸ்திரேட் விஞ்சு துரை அலறியதனையும், இன்ஸ்பெக்டரை அழைத்து அந்த வாசகங்களை அழிக்குமாறு அவர் ஆணையிட்டதனையும்விளக்குகின்றது.

நெல்லையில் மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு வெளியேயும் ஆவேசம் கொண்ட மக்கள் கூட்டம் வந்தே மாதரம் என்று கோஷித்துக் கொண்டு அமளி செய்தது பற்றி வ.உ.சி. கூறுவது வருமாறு:



> "வந்தே மாதரம்"
> பூசல் எங்கும் பொங்கி எழுந்தது!
> மிரண்டேன் என்ன விளையுமோ என்று
> திரண்ட பலரைத் தெருவினிற் கண்டேன்.
> விஞ்சு வந்தால் வீண்போ ராகுமென்
> றஞ்சி அவரை யழைத்துத் திருப்பி
> குறுக்கு வழியைக் கூடி நடந்து
> வெறுக்க வெறுக்க விளையுளை நல்கும்
> தாம்பிர வருணித் தண்ணீர் கடந்து
> தீம்பல பேசிச் செறிவுற விருந்தேம்.
>
> (வ.உ.சி. சுயசரிதை; பக். 76-77)

இதிலே, கோர்ட்டுக்கு வெளியே கூடி வந்தே மாதர கோஷமெழுப்பிய மக்களை விஞ்சு கண்டால், சுட்டுக் கொன்று விடுவாரென்று தாம் அஞ்சியதாகவும், அந்தக் கொடுமையிலிருந்து தேச பக்தியுள்ள மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, விஞ்சு பார்த்துவிடாதபடி, அவர்களைக் குறுக்கு வழியில் தாம் அழைத்துப் போய் தாம்பிரவருணி யாற்றைக் கடந்து சென்றதையும் வ.உ.சி. மிகுந்த உருக்கத்தோடு கூறுகிறார்.

## வீடுதோறும் வந்தே மாதரம்!

தூத்துக்குடி நகரில் வெளியே வீதிகளில் நடமாடும் வெள்ளையர்களைக் கண்டால், வந்தே மாதரம் என்று சொல்லும்படி மக்கள் கட்டாயப்படுத்

திஞர்களாம். இதுபற்றியும் தமது சுயசரிதையில் வ.உ.சி. கூறியுள்ளது வருமாறு:

ஆழியிற் கிடந்த அருங்கலம் நண்ணிப்
பாழெனச் செய்யப் பலவும் எண்ணிப்
பயந்தவண் சென்று படுத்ததாக
நயந்து மொழிந்தனர்; நாளும் வெளியில்
வண்டியிற் செல்கையில் "வந்தே மாதரம்"
அண்டி யடிப்பதா அலறி அழுதனர்."

(வ.உ.சி சுயசரிதை; பக். 59)

வெள்ளையர்கள், அந்நாளிலே தேசபக்தர்களைக் கண்டாலே "வந்தே மாதரம்" என்று பெயரிட்டுத்தான் அவர்களை அழைப்பது வழக்கமாயிருந்தது.

சுதேசிக் கிளர்ச்சியானது தூத்துக்குடி நகரங்களில் வலுத்திருந்த காலத்திலே, வீடுதோறும் வந்தே மாதர கோஷம் நாள் தோறும் ஒலித்தது என்கிறார் வ. உ. சி.

"வந்தே மாதரம்," "வாழ்க சுதேசியம்"
"சொந்தத் தேசம் சுகம் பெற" என்னும்
மனைதாறும் கண்ட மாண்புயர் சொற்கள்"

(வ.உ.சி. சுயசரிதை; பக். 42)

"சிதம்பரம் பிள்ளை இரண்டாயுள் சிறைத் தண்டனை பெற அவர் தூத்துக்குடி, திருநெல்வேலி மக்களை மந்தே மாதரம் எனறு கோஷிக்கச் செய்ததும் ஒரு காரணமாகும்" என்கிறார் ராஜாஜி.



## சிறையிலும் "வந்தே மாதரம்"

விடுதலைப் போராட்ட காலத்தில், இந்திய சிறைச்சாலைகளிலே ஆயிரக்கணக்கில் தேசபக்தர்கள் அடைக்கப்பட்டனர். அப்போது, சிறைச்சாலையைத் தவச்சாலையாகக் கருதுகின்ற தேசபக்தர்கள், தங்களுக்கு நேர்ந்துவிட்ட துன்பத்தை இன்பமாக மாற்றிக்கொள்ளுவதற்கு வந்தே மாதரம் கோஷத்தைப் பயன்படுத்தினர். சிறை அதிகாரிகள் தேசபக்தர்களான கைதிகளை "வந்தே மாதரங்கள்" என்று கூறி, கேலி செய்வதுண்டு. அதுபொருது கைதிகளும் இடைவிடாமல் "வந்தே மாதரம்" கோஷிப்பார்கள். இதனை எனது சிறை வாழ்க்கையிலும் அனுபவித்திருக்கிறேன்.

வந்தே மாதரம் கோஷத்தைக் கேட்கும்போதெல்லாம் சிறையதிகாரிகள் ஆத்திரமடைந்தனர். கோஷிக்க வேண்டாம் என்று அரசியல் கைதிகளை வேண்டிக் கொண்டனர். வேண்டுகோள் பயன் தராதபோது, வெளியிலிருந்து போலீசாரை வரவழைத்து, சிறைக் கைதிகளை அடித்து நொறுக்கியதுமுண்டு. அதனல், அடிக்கடி சிறையில் குழப்பங்கள் ஏற்படுவது வழக்கமாயிருந்தது.

சிறையில் அதிகாரிகளுடன் பூசல் ஏற்படக் கூடிய வகையில் 'வந்தே மாதரம்' என்று கோஷிப்பதை காந்தியடிகள் விரும்பவில்லை. இது பற்றி அவர் 29-12-1921 தேதியில் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதியதாவது:

“சாதாரணக் கைதிகளையே ஆத்திரமடையும்படிச் செய்யக் கூடிய சிறை கட்டுத்திட்டங்களை எதிர்த்த ஒத்துழையாமைக்காரர்கள் சிறைக்குள் ‘வந்தே மாதர’ கோஷங்களை எழுப்பலாமா?”

“இது கல்கத்தாவிலிருக்கும் ஒரு நண்பரிடமிருந்து வந்திருக்கும் தந்தி. வந்தே மாதர கோஷம் போடுவது அல்லது சிறைக் கட்டுத்திட்டங்களை மீறிவேறுஏதாவதுசெய்வது ஒத்துழையாமைக்காரரைப் பொறுத்த வரையில் சட்ட விரோதமாகிறது. உடனிருக்கும் கைதிகளைக் கெடுத்துவிடக் கூடிய காரியம் எதையும் ஒத்துழையாமைக் காரர்கள் செய்யக்கூடாது. அவர் பகிரங்கமாகச் சிறை விதிகளை மீற, ஒரே ஒரு சந்தர்ப்பந்தான் உண்டு. அவரை அவமானப்படுத்த முயற்சித்தாலோ, வார்டர்கள் வழக்கமாகச் செய்வதைப் போல கைதிகளின் சௌகர்யத்துக்காக இருக்கும் விதிகளை அவர்கள் மீறி நடந்தாலோ, அடிக்கடி நடப்பது போன்று, மனிதன் உண்பதற்குத் தகுதியில்லாத உணவு கொடுக்கப்பட்டாலோதான் அவர்கள் சிறை விதிகளை மீறலாம்.”

(கா. நூ. தொ. 8 - பக். 148, 150, 151)

ராஜாஜி அவர்கள், 1920ல் தாம் சிறைப்பட்டிருந்தபோது எழுதிய நாட்குறிப்பை, “சிறையில்



தவம்” என்னும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். அதிலே வந்தே மாதரம் பற்றிய அனுபவங்களையும் குறிப்பிட்டிருக்கிறார். 25. 12. 21ஆம் தேதிக் குறிப்பில்,

“கடுங்காவல் பெற்ற கைதிகள் சிலரை வேலைக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் என்னைக் கண்டதும், “வந்தே மாதரம்” என்று கோஷித்துக் கொண்டு எனக்கு வணக்கம் செய்தார்கள்”

என்று குறிப்பிட்டிருக்கிறார். 15-1-22 தேதிக் குறிப்பில் அவர் கூறுவதாவது:

“சர்க்காரைக் கவிழ்க்கச் சதியாலோசனை செய்து அதற்காக அந்தமான் தண்டனை பெற்று வந்துள்ள... பிரதாப் சிங், தினந்தோறும் காலையில் இரண்டு சப்பாத்தியும், மத்தியானத்தில் கொஞ்சம் பருப்பும் கொண்டுவந்து தருகிறார். வரும் போதெல்லாம் “வந்தே மாதரம் என்று சொல்லிக் கொண்டே வருவார். நான் அதைக் கேட்டதும், சில சமயங்களில் ‘ராம் ராம்’ என்றும், சில வேளைகளில் ‘வந்தே மாதரம்’ என்றும் பதில் கூறுகிறேன்.”

லண்டன் நகரிலே, லார்டு கர்ஸான்வாலி என்னும் பிரிட்டிஷ் அதிகாரியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் மதன்லால் திங்ரா என்ற பயங்

கரப் புரட்சியாளர். அவருக்கு லண்டன் நீதி மன்றத்தில் வெள்ளை நீதிபதி ஒருவரால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரைத் தூக்கி லேற்றியபோது, "வந்தே மாதரம்" என்று கோஷித்துக்கொண்டே உயிர் துறந்தார். ஆம்; தூக்கு மேடையில் நின்று சொல்லும் மரண கீதமாக வும் விளங்கியது வந்தேமாதரம்!

## சட்ட மன்றத்தில் வந்தே மாதரம்!

'வந்தே மாதரம்' பாடலும் கோஷமும் மாநில சட்ட மன்றங்களிலேயும் ஒலித்தன. 1923ல் சுயராஜ்யக் கட்சியின் பெயரால் காங்கிரஸ்காரர்கள் மாநில சட்ட மன்றங்களுக்குச் சென்றனர். அவர் கள் எதிர்க்கட்சியினராகத்தான் வேலை செய்தனர்.

### வெளியேற்றம்

அரசின் சார்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத் தையோ, மசோதாவையோ எதிர்த்து அவர்கள் வெளிநடப்புச் செய்தபோதெல்லாம் "வந்தே மாதரம்" என்று கோஷமிட்டுக் கொண்டே செல் வது வழக்கமாக இருந்தது. சுதந்திரப் போராட்டத் தின் மற்றொரு முனையாகத்தான் சட்ட மன்றத்தைப் பயன்படுத்தினர் காங்கிரஸ்காரர்கள். அதனால், வந்தே மாதரம் என்ற போர்க் கோஷத்தை சட்ட மன்றத்திலேயும் ஒலித்தனர்.

1937ல் இந்தியாவில் மாநிலச் சட்ட மன்றங் களுக்கு நடந்த பொதுத் தேர்தலில் ஆறு மாகாணங்

களில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைத்தது. அங்கெல்லாம் காங்கிரசானது அதிகாரப் பொறுப்பை ஏற்றது. அதன்படி அப்போது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசமாக விளங்கிய சென்னை மாகாணத்திலும் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. தலைவர் ராஜாஜி அவர்கள் பிரதம அமைச்சராகப் பொறுப் பேற்றார். ஆந்திர நாட்டில் புகழ்பெற்று விளங்கிய புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் சென்னை மாகாண சட்டப் பேரவையின் தலைவரானார். அப்போது, சட்டப் பேரவையின் நடவடிக்கை தொடங்கும் போது, பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலை இறைவணக்கப் பாடலாகப் பாடும் வழக்கத்தை புலுசு சாம்பமூர்த்தி ஏற்படுத்தினார். சட்டப் பேரவை யில் இருந்த முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் எதிர்த் தனர்.

பங்கிம் சந்திர பாபுவின் வந்தே மாதரம் பாடலில், வங்க மாதா, கைகளிலே வாட்களுடன் கூடிய கடுமையும் ஒளியுமுடைய துர்க்கையாக வருணிக்கப்பட்டிருக்கிறாள். தாமரை மேல் வீற்றி ருக்கும் கமலாசனியாகவும், பசியாலும் பிணியாலும் மாண்ட கோடிக் கணக்கான குழந்தைகளின் மண்டை ஓடுகளை அணிந்து இருண்ட சூழ்நிலையில் இருக்கின்ற காளியாகவும், எதிரியை வீழ்த்தத் தயாரா யிருக்கின்ற தேவதையாகவும் சித்தரிக்கப் பட்டிருக்கிறாள். வலப் பக்கத்திலே இலக்குமியும், இடப்புறத்திலே சரசுவதியும் இருக்கிறார்கள். அருகில்



வீரக் கடவுளான கார்த்திகேயனும், வெற்றிக் கடவு ளான கணேசரும் இருக்கிறார்கள்.

இப்படி, பல கடவுளர் உண்டு என்ற நம்பிக்கை யின் அடிப்படையில் இந்துக்களுக்கே வுரிய தேவையாக வங்காளம் வருணிக்கப்பட்டிருப்பதால் தான் ஏக தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடைய முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு வந்தே மாதரம் பாடல் இலக்கானது.

## முஸ்லிம் லீக் எதிர்ப்பு!

23—9—1937 அன்று சட்டப் பேரவையின் நடவடிக்கை தொடங்கியபோது வழக்கம்போல் வந்தே மாதரம் பாடப் பெற்றது. அதனைப் பாடத் தொடங்கியதுமே திரு. எஸ். எம். லால்ஜான் என்ற முஸ்லிம் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார். அப்போது அவர் கூறியதாவது:

> "தலைவர் அவர்களே, நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். "இந்த அவையில் 'வந்தே மாதரம்' பாடலை இறை வணக்கத்திற்காகப் பாடலாமா?" என்பது பற்றித் தங்கள் தீர்ப்பினைக் கோரு கிறேன். காங்கிரஸ் தலைவராகிய பண்டித ஜவகர்லால் நேருவே, "அது ஒரு நாட்டுப் பாடல் அல்ல" வென்றும், "ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுப்பப் பட்ட ஒரு போர்க் குரல்" என்றும் அறிவித்

திருக்கிறார். ஏறக்குறைய 30 ஆண்டு களுக்கு முன்பு அத்தகைய ஒரு நிலையை வங்காளத்தில் அது பெற்றிருந்தது. உண்மையில், அது இஸ்லாத்திற்கும் எதிரான ஒரு போர்க் குரலாகும். அதனை நான் ஆவணங்களின் துணைகொண்டு நிரூபிக்கப் போகிறேன். தலைவர் அவர்களே, அப்பாடலை ஒரு நாட்டு இறை வணக்கமாகப் பாடலாமா என்பதுபற்றித் தங்கள் தீர்ப்பைக் கோருகிறேன்."

"திரு. எஸ். எம். லால்ஜான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை மீது இறைவணக்கம் (வந்தே மாதரம்) பாடி முடிக்கப்பட்ட பின்னர் தீர்ப்பளிக்கிறேன்" என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். திரு. லால் ஜான் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

## தேசிய முஸ்லிம்கள் ஆதரவு

இறைவணக்கத்திற்குப் பின்பு திரு. எஸ். எம். லால்ஜான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை மீது தீர்ப்பளிக்கத் தாம் தயார் என்று பேரவைத் தலைவர் அறிவித்தார். அப்போதைய காங்கிரஸ் அமைச்சர்களில் ஒருவரான மாண்புமிகு யாகூப் ஹசன் அவர்கள்,

"சட்டப் பேரவையிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்களைக் கலந்து கொள்ளாமல் திரு. எஸ். எம். லால்ஜான் தம்முடைய



விருப்பப்படி இறைவணக்கப் பாடலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது சரியல்ல. அவை முடிந்த பின்பு பேரவைத் தலைவரின் அறையில், அவருடன் கலந்து பேசி, இது பற்றி ஒரு முடிவுக்கு வரலாம். திரு. லால் ஜான் தனது ஒழுங்குப் பிரச்னையை இப்போது வற்புறுத்த வேண்டாம்."

என்று கூறினார்.

திரு. அப்துல் அமீத்கான் என்ற உறுப்பினர் மாண்புமிகு யாகூப் ஹசன் தெரிவித்த கருத்தை ஆதரித்ததுடன், இறைவணக்கம் நடந்து கொண்டிருந்தபோது திரு. லால்ஜான் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தது சட்டப் பேரவையை அவமதித்ததாகும் என்றும், அதற்காக எஸ். எம். லால்ஜான் பேரவைத் தலைவரிடம் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். அவைத் தலைவரும் அதையே விரும்பினர்.

## ராஜாஜியின் நிலை

வந்தே மாதரம் பற்றி எழுந்த இந்த விவாதத்திலே சூடு பிடிக்கத் தொடங்கியது. சர் வில்லியம் ரைட் என்ற ஐரோப்பிய உறுப்பினர் சுற்றி வளைத்துப் பேசி திரு. எஸ். எம். லால்ஜான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு ஆதரவு தெரிவித்தார். பல உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கு கொண்டனர். இவர்களில் பெரும்பான்மையினர் அவைக்கு

திரு. லால்ஜான் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கோரினர். விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பி பிரதமர் சி. ராசகோபாலாச்சாரியார் தமது கருத்தைத் தெரிவிக்க முன்வந்தார். அவர் கூறியதாவது :

“தலைவர் அவர்களே, இறைவணக்கத்தின் ஒரு பகுதியாக வந்தே மாதரம் பாடல் பாடப்படுவதற்குத்தான் திரு. எஸ். எம். லால்ஜான் ஆட்சேபம் தெரிவித்ததாக எனக்குப் பட்டது. நான் புரிந்து கொண்ட வகையில் தம்முடைய சொந்த மதக் கோட்பாட்டின் அடிப்படையில் அவர் அந்த ஆட்சேபணையை எழுப்பினார். ஆனால், அவையினர் எழுந்து நின்று இறைவணக்கத்தில் பங்கேற்க இருந்த நிலையில் அவர் தம் ஆட்சேபத்தை எழுப்பியதால், அவர் ஓரளவு ஒழுங்கீனமான முறையில் நடந்து கொண்டார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விட்டது. இறை வணக்கத்தைத் துவக்குவதற்கு அவை உறுப்பினர்கள் எழுந்து நின்றபோது இதை எழுப்பாமல், அவர் தம் மதக் கோட்பாட்டை அனுசரித்து வெளியே இருந்து விட்டு, பின்னர் வந்து இதனை எழுப்பியிருக்கலாம்.

“தாங்கள் அவரை ஒழுங்குப் பிரச்னையைத் திரும்பப் பெறச் சொன்னீர்கள்.



உறுப்பினர்களும் அவருக்கு அவ்வாறே அறிவித்தனர். திரு. அமீத்கானும் இந்த எதிர்ப்பைப் பின்னால் எழுப்பிக் கொள்ளலாம் என்ற வகையில் இதனைத் திரும்பப் பெறலாம் என்று கேட்டுக்கொண்டார். அந்தச் சூழ்நிலையில் அவையை விட்டு வெளிநடப்புச் செய்ததற்கு வருத்தம் தெரிவிக்குமாறு தாங்கள் அவரைக் கேட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவையை அவமதிக்கும் வகையில் அல்லாமல், தம்முடைய மதக் கொள்கையில் குறுக்கீடு என்று தாம் கருதியதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவே வெளியேறினார் என்று என் மனதிற்குப் படுகிறது. அவர் இதில் சரியாகவும் இருந்திருக்கலாம்; அல்லது தவறாகவும் இருந்திருக்கலாம். ஆகவே, நிலவரத்தை நிதானத்துடன் அனுதமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். உறுப்பினர் தம்முடைய ஒழுங்குப் பிரச்னையைத் தற்போது திரும்பப் பெறக் கருதினால், அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென யாரும் வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் இதனை மிக்க பணிவுடன் தெரிவித்துக்கொண்டு, இதில் முடிவெடுப்பதைத் தங்களுக்கு விட்டுவிடுகிறேன். இதுபற்றி எனக்கு ஏற்பட்ட எண்ணத்தையே சொன்னேன்.”

## பேரவைத் தலைவர் கருத்து

பிரதமர் ராஜாஜி பேசிய பின்னர், திரு. எஸ். எம். லால்ஜான், தாம் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர், சட்டப் பேரவைத் தலைவர் தெரிவித்த கருத்து வருமாறு :

"இது கடவுள் வணக்கம்; பாடப்படுவது வந்தே மாதரம் பாடல் மட்டுமல்ல. ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் அவைத் தலைவர் இருக்கையை ஏற்பதற்கு முன்னர் நடைபெறும் இறை வணக்கத்திற்கு ஒப்பானதாக இதனைச் சொல்லலாம். கனடா நாட்டின் பார்லிமெண்டிலும், உலகிலுள்ள மற்ற பல பார்லிமெண்டுகளிலும், அவைத் தலைவர் தமது இருக்கையை ஏற்குமுன் நடைபெறும் இறை வணக்கத்திற்கு ஒப்பானது என்றும் சொல்லலாம். சில நாடாளு மன்றங்களில் நடைமுறைச் சட்டத்திலேயே இது உள்ளடக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற நடைமுறையிலும் இது மதிக்கப் பெறுகிறது. சில நாடுகளில் நாடாளு மன்ற நடவடிக்கைகளின் தொடக்கத்தில் ஓர் அவசியமான அம்சமாக இறை வணக்கம் இருக்கிறது; அவ்வழக்கம் இந்தப் பேரவையின் ஆரம்ப காலத்திலிருந்து அவைத் தலைவர் இருக்கையை ஏற்குமுன் கையாளப்பட்டு வந்திருக்கிறது.



"இறைவணக்கம் எவ்விதத்தில் அமைய வேண்டும் என்ற விஷயம் ஆரம்பத்திலிருந்தே உணர்ச்சியைத் தூண்டுவதாகவே இருந்து வந்திருக்கிறது. இந்த அவைத் தலைமையும், இவ்வவைக்கு வரும் உறுப்பினர்களின் பல்வேறு மதங்கள், மற்றும் கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இறைவணக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆய்ந்து வந்துள்ளது. ஒருநாள் இந்து இறைவணக்கம்; அடுத்த நாள் இஸ்லாமிய இறை வணக்கம்; அதற்கு அடுத்த நாள் கிறித்துவ இறைவணக்கம் என்ற வகையில் அமைந்தால் நலமாக இருக்குமா என்பதும் இந்த அவைத் தலைவரின் கவனத்திலிருந்து வருகிறது.

"அனைவருக்கும் பொதுவாக உள்ள வணக்கம் தாய்நாட்டின் இறை வணக்கமாகத்தான் இருக்கும் என அவைத் தலைவருக்குத் தோன்றியது. இந்துக்கள், இஸ்லாமியர், மற்றும் கிறித்துவர்கள் கொண்ட லட்சக்கணக்கான மக்களால் இந்தியா முழுவதும் வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதும் ஒவ்

வொரு நாளும் பாடப் பெறும் இறை வணக்கப் பாடலாகவும் அது இருந்து வருகிறது. இந்த அவைக்குரிய முதல் இறை வணக்கப் பாடலாக அது இருக்க வேண்டுமென இந்த அவைத் தலைவரால் கருதப் பட்டது. அவையிலுள்ள அனைத்துப் பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஆரம்பத்தில் பாடத்தக்க சரியான இறை வணக்கமாக அது இருக்கும். அத்துடன், மற்றவகையான இறை வணக்கங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தில் தினசரி இறைவணக்கம் பாடுவதற்காக 'சாப்ளேயின்' ஒருவர் நியமிக்கப் படுகிறார். தினசரி இறை வணக்கத்தோடு பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தின் அவைத் தலைவர் சில சமயங்களில் தம்முடைய இறை வணக்கத்தையும் சேர்த்துக் கொள்வதுண்டு. 'சாப்ளேயின்' இல்லாதபோது, அவைத் தலைவரே இறை வணக்கத்தை நடத்துவதும் உண்டு. கனடா நாட்டில் நாடாளு மன்றத்தில், நிலை உத்தரவு 15-ன் படி, ஒவ்வொரு நாளும் அவைக் கூட்டத்தில், அந்த நாளின் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமுன் அவைத் தலைவர் இறை வணக்கத்தைப் படிப்பார். இந்த இறைவணக்கம் அவைத் தலைவரால் ஒருநாள் ஆங்கில மொழியிலும், மறுநாள் பிரெஞ்சு மொழியிலும் நடத்தப் பெறும்.



இவ்வாறே பல்வேறு நாடாளு மன்றங்களில் அவரவர்க்குரிய மரபுகள் இருப்பதைக் காணலாம். இந்த நாடாளு மன்றம்-அதாவது, சென்னை சட்டப் பேரவை-தனக்குரிய மரபை உண்டாக்கிக் கொள்ள உரிமை உண்டு. இறை வணக்கத்தைக் குறித்த இந்த மரபை வளர்த்துக் கொள்ளலாம்.

இங்கிலாந்து, கனடா, நியூசீலாந்து ஆகிய நாடுகளிலுள்ள நாடாளுமன்றங்கள் போன்று இந்த அவைக்கும் ஒரு நாடாளு மன்றத்திற்குரிய ஒரு உண்மையான மதிப்பை அளிக்கும் வகையில் "தேசீய இறை வணக்கம்" ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதோடு, அத்துடன் வேதங்களிலிருந்து ஒருநாள், திருக்குரானிலிருந்து ஒரு நாள், விவிலியத்திலிருந்து ஒருநாள் இறை வணக்கங்களைச் சேர்த்துக் கொள்ளளலாம் என்பதையும் இந்த அவைத் தலைவர் சிந்தித்து வருகிறார். அத்தகைய ஒரு மரபை வளர்க்கும் வகையில் இறை வணக்கத்தின் முதல் அம்சம் எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றி இந்த அவைத் தலைமை சிந்தித்து வருகிறது. அது முற்றிலும் ஆராயப் பட்ட பின் அவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்படும் வந்தே மாதரம் பாடல் தேசீய இறை வணக்கம் ஆகும்.

"திரு. லால்ஜான் தன்னுடைய ஒழுங்குப் பிரச்சினையை திரும்பப் பெற்றமையால், அவருடைய எதிர்ப்பும் திரும்பப் பெறப்படுகிறது. இந்தத் தீர்ப்பு அல்லது இந்த அறிக்கை உறுப்பினர் அவையில் நடந்து கொண்ட முறையால் ஏற்பட்டது. இத்தகைய நிகழ்ச்சிகள் இனி நேரா என்று நம்புகிறேன்."

இந்த விவாதத்தின் முடிவில் ஆங்கிலேயரான சர் வில்லியம் ரைட் என்பவர், வந்தே மாதரம் பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பு தம் போன்றவர்களுக்குத் தரப்பட வேண்டுமென்று பேரவைத் தலைவரிடம் வேண்டிக்கொண்டார். அதற்கு அவைத் தலைவரும் இசைவு தெரிவித்தார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு வந்தே மாதரம் பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பு பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப் பெற்றது. அது குறித்து, 1-10-37 அன்று சட்டப் பேரவையில் அதன் தலைவர் அறிவித்ததாவது:

"வந்தே மாதரம் பாடலுக்குப் பல மொழிபெயர்ப்புகள் சட்டப் பேரவைத் தலைவருக்குக் கிடைத்தன. அப்பாடலை மொழிபெயர்ப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. ஆனால், இன்று, தேவநாகரியில் உள்ளபடி அந்தப் பாடலின் மூலம், அதனை அப்படியே ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு பெயர்த்தெழுதப்பட்ட ஆக்கம், ஆங்கில மொழி



யாக்கம் ஆகிய மூன்றும் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

"இதனை மொழிபெயர்த்தவர் மதிப்பிற்குரிய ஸ்ரீ அரவிந்தகோஷ் அவர்களேயாவார். ஸ்ரீ பங்கிம் சந்திரர் அவர்களால் எழுதப்பட்ட இப் பாடலின் மூலத்தைப் பற்றி மொழிபெயர்ப்பாளர் கீழ்க்கண்ட குறிப்பை இணைத்துள்ளார்:

"இனிமை, தெளிவு, மற்றும் உயர்ந்த கவிதைப் போக்கு ஆகிய மூன்றையும் மிகச் சிறந்த முறையில் ஒருசேர உள்ளடக்கியுள்ள தன்மையினால் இந்த வங்காள நாட்டுப் பாடலை கவிதை வடிவில் வேறு மொழியில் மொழிபெயர்ப்பது கடினமாக உள்ளது. இது குறித்து எடுக்கப்பட்ட எல்லா முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. ஆகவே மூலப் பாடலின் உட்கருத்தை வங்காள மொழி அறியாதவர் ஓரளவு உணரும் வண்ணம் பாடலின் மொழியாக்கத்தை வரிக்கு வரி உரை நடையாகவே தந்துள்ளேன்."

"உரை நடையிலான மொழியாக்கம் ஒன்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளது. 'வந்தே மாதரம்' பாடலை நான் எப்போதும் 'தாயே, போற்றி!' என்ற அளவிலேயே புரிந்து கொண்டிருக்கிறேன்.

அதனையே ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த புலரும் கையாண்டிருக்கின்றனர். ஆயினும், ஸ்ரீ அரவிந்தகோஷ் அவர்களுடைய மொழி யாக்கத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கச் செய்துள்ளேன்.''

முஸ்லிம் உறுப்பினரான திரு. லால்ஜான் வந்தே மாதரம் பாடலை ஆட்சேபித்ததும் சென்னை சட்டப் பேரவையின் வரலாற்றில் ஒரு சிறப்பு சேருவதற்குக் காரணமாகி விட்டது. புதுவையில் தங்கி வாழ்ந்த தவமுனியான அரவிந்தரை அணுகி, 'வந்தே மாதரம்' பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தருமாறு அவரைக் கேட்கின்ற பேறு முதலில் சென்னை சட்ட மன்றத்திற்குத் தானே கிடைத்தது! 'வந்தே மாதரம்' பாடலின் சிறப்பை, அரவிந்த மகரிஷி மூலம் உலகம் அறிந்துகொள் வதற்கும் திரு. லால்ஜான் உதவி புரிந்துவிட்டார்.

வங்கத்திலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை பெற்றவர் அரவிந்தர். அம்மொழிகளிலே எண் ணற்ற கவிதை நூல்களையும் அவர் படைத்திருக் கிறார். அப்படியிருந்தும், வந்தே மாதரம் பாடலை ஆங்கில மொழியில் கவிதை நடையில் மொழி பெயர்த்துத் தருவது சாத்தியமில்லை என்பதை ஒப்புக்கொண்டு, மூலப் பாடலின் பொருளை மட்டும் உணர்த்தும் வகையில் உரைநடையில் அரவிந்தர் மொழிபெயர்த்துத் தந்திருப்பதும் பங்கிம் சந்திர ருடைய புலமைத் திறனுக்குச் சான்றாகும்.

# எதிர்ப்பும் போட்டியும்

“வந்தே மாதரம்'' என்னும் தேசீய கீதத் திற்கும் கோஷத்திற்கும் இந்து வைதிக நெறிப்படி ஆதரவளிக்கும் ஒரு சாராரும் இருந்தனர். அவர்கள், அந்தக் கீதத்தின் அமைப்பைக் குறைப்பதையும் மாற்றுவதையும் வெறுத்தனர். அதுபோல, இஸ் லாமிய மத உணர்வு காரணமாக வந்தே மாதரம் கீதத்தையும் கோஷத்தையும் முஸ்லீம்களில் சிலர் எதிர்த்தனர்.

இந்தக் கருத்து வேறுபாட்டிலே பாரதத்தின் பெருந் தலைவர்களும் கலந்திருந்தனர்.

## கீதத்தில் மாறுதல்

தேசீய விழாக்களில் 'வந்தே மாதரம்' கீதத்தைப் பாடிய பின்னரே நிகழ்ச்சி தொடங்குவது ஒரு புனிதமான சடங்காக இருந்தது. அப்போது அவையிலுள்ளோர் அனைவரும் எழுந்து நின்று மரி

அதனையே ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த புலரும் கையாண்டிருக்கின்றனர். ஆயினும், ஸ்ரீ அரவிந்தகோஷ் அவர்களுடைய மொழியாக்கத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கச் செய்துள்ளேன்.”

முஸ்லிம் உறுப்பினரான திரு. லால்ஜான் வந்தே மாதரம் பாடலை ஆட்சேபித்ததும் சென்னை சட்டப் பேரவையின் வரலாற்றில் ஒரு சிறப்பு சேருவதற்குக் காரணமாகி விட்டது. புதுவையில் தங்கி வாழ்ந்த தவமுனியான அரவிந்தரை அணுகி, ‘வந்தே மாதரம்’ பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தருமாறு அவரைக் கேட்கின்ற பேறு முதலில் சென்னை சட்ட மன்றத்திற்குத் தானே கிடைத்தது! ‘வந்தே மாதரம்’ பாடலின் சிறப்பை, அரவிந்த மகரிஷி மூலம் உலகம் அறிந்துகொள் வதற்கும் திரு. லால்ஜான் உதவி புரிந்துவிட்டார்.

வங்கத்திலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை பெற்றவர் அரவிந்தர். அம்மொழிகளிலே எண்ணற்ற கவிதை நூல்களையும் அவர் படைத்திருக்கிறார். அப்படியிருந்தும், வந்தே மாதரம் பாடலை ஆங்கில மொழியில் கவிதை நடையில் மொழி பெயர்த்துத் தருவது சாத்தியமில்லை என்பதை ஒப்புக்கொண்டு, மூலப் பாடலின் பொருளை மட்டும் உணர்த்தும் வகையில் உரைநடையில் அரவிந்தர் மொழிபெயர்த்துத் தந்திருப்பதும் பங்கிம் சந்திர

யாதை காட்டும் மரபும் தோற்றுவிக்கப்பட்டது. ஆனல், தேசீய கீதம் மிகவும் பெரியதாக இருப்பதால், அதிக நேரம் அவையினர் நிற்க வேண்டியிருந்தது. இதனைத் தவிர்ப்பதற்காக, காங்கிரஸ் காரியக் கமிட்டி 1937-ல் கூடி, “தேசீய விழாக்களில் மட்டும் தேசீய கீதத்தின் முதல் ஆறு வரிகளைப் பாடினுல் போதும்” என்று தீர்மானம் நிறைவேற்றியது. முஸ்லீம்களைத் திருப்தி செய்வதற்காக கீதத்திலுள்ள தேவதா வருணனையை அகற்றுவதற்காகவும் இந்த முடிவு தேவைப்பட்டது.

இந்த மாறுதலை வங்க மாநிலத்துத் தேசபக்தர்களிலே பலர் எதிர்த்தனர். வந்தே மாதர கீதம் வங்க மொழியில் இருப்பதும், வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியிலிருந்து இந்தக் கீதத்திற்குப் பெருமதிப்பு பிறந்ததும் உலகறிந்தவையாகும். இதனுல், வந்தே மாதரம் பாடலைச் சுருக்குவதானது வங்க மொழிக்கும், வங்காளியருக்கும் இழைக்கும் அவமானம் என்றுகூட வங்கத் தலைவர்களிலே சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதுபற்றி ஜவகர்லால் நேருவுக்கு 18. 11. 37ல் தாம் எழுதிய கடிதத்தில் காந்தியடிகள் குறிப்பிட்டிருப்பதாவது:

> “வந்தே மாதரத்தைப் பற்றிய வாக்குவாதம் இன்னும் முடிந்தபாடில்லை. காரியக் கமிட்டியின் தீர்மானத்தைப் பற்றிப் பல வங்காளிகளுக்கு ஏற்பட்டுள்ள மனவேதனையும் இன்னும் தீர்ந்தபாடில்லை. அமைதியான நிலைமை ஏற்படும்படிச் செய்ய தாம் முயற்சித்து வருவதாக சுபாஷ் (சுபாஷ் சந்திர போஸ்) என்னிடம் கூறினுர்.”

*(கா. நூ. தொ. 14,பக். 191-193)*



காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முடிவுக்கு வங்கத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு நாளடைவில் சமாளிக்கப்பட்டு விட்டது.

காரியக் கமிட்டியின் தீர்மானம் தேசம் முழுவதிலும் நடைமுறைக்கு வந்தது. இப்போதும் அகில இந்திய வானெலியில் நாள்தோறும் நிகழ்ச்சியின் தொடக்கத்திலே பங்கிம் சந்திரரின் ‘வந்தே மாதரம்’ பாடல் முழுவதும் பாடப்படுவதில்லை. கீழ்வரும் பகுதி மட்டுமே பாடப்படுகிறது:

“ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம் (வந்தே)
ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஸோபிநீம்
ஸுஉறாஸிநீம், ஸுமதுர பாஷீணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம். (வந்தே)

## ஜனுப் ஜின்னுவின் எதிர்ப்பு

1905ஆம் ஆண்டு முதல் 1912வரை வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருந்தபோது தேசம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்கள் எந்தவிதமான முணுமுணுப்புமின்றி இந்து சகோதரர்களுடன் சேர்ந்து வந்தே மாதரம் கீதத்தையும் கோஷத்தையும் போற்றினர். ஆனுல், ஜனுப்

காரியக கமிட்டி 1937-ல் கூடி, "தேசிய விழாக்களில் மட்டும் தேசீய கீதத்தின் முதல் ஆறு வரிகளைப் பாடினால் போதும்" என்று தீர்மானம் நிறைவேற்றியது. முஸ்லீம்களைத் திருப்தி செய்வதற்காக கீதத்திலுள்ள தேவதா வருணனையை அகற்றுவதற்காகவும் இந்த முடிவு தேவைப்பட்டது.

இந்த மாறுதலை வங்க மாநிலத்துத் தேசபக்தர்களிலே பலர் எதிர்த்தனர். வந்தே மாதர கீதம் வங்க மொழியில் இருப்பதும், வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியிலிருந்து இந்தக் கீதத்திற்குப் பெருமதிப்பு பிறந்ததும் உலகறிந்தவையாகும். இதனால், வந்தே மாதரம் பாடலைச் சுருக்குவதானது வங்க மொழிக்கும், வங்காளியருக்கும் இழைக்கும் அவமானம் என்றுகூட வங்கத் தலைவர்களிலே சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதுபற்றி ஜவகர்லால் நேருவுக்கு 18. 11. 37ல் தாம் எழுதிய கடிதத்தில் காந்தியடிகள் குறிப்பிட்டிருப்பதாவது:

> "வந்தே மாதரத்தைப் பற்றிய வாக்குவாதம் இன்னும் முடிந்த பாடில்லை. காரியக் கமிட்டியின் தீர்மானத்தைப் பற்றிப் பல வங்காளிகளுக்கு ஏற்பட்டுள்ள மனவேதனையும் இன்னும் தீர்ந்தபாடில்லை. அமைதி

ஜின்னா அவர்கள் முஸ்லிம் லீகின் தலைவரான பின்னர் – குறிப்பாக, பாகிஸ்தான் கோரிக்கை பிறந்ததன் பிறகு நிலைமை மாறியது. தேசத்தை ஒரு தெய்வம்போலக் கருதுவதும், கீதமிசைத்து வணங்குவதும், கோஷம் எழுப்பி வாழ்த்துவதும் இஸ்லாமியர் கடைப்பிடிக்கும் அருவ ரீதியிலான ஏக தெய்வ வழிபாட்டிற்கு எதிரானதாகும் என்ற கருத்து பிறந்தது. முஸ்லிம் லீகின் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்கள் ‘வந்தே மாதரம்’ கீதத்திற்கு எதிர்ப்பு காட்டினார்.

1938-ல், அப்போது அகில இந்திய காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்த சுபாஷ் சந்திர போஸ் அவர்களும், காந்தியடிகளும் ஜனாப் ஜின்னாவுடன் நாட்டின் விடுதலை விஷயத்தில் சமரசம் பேச விரும்பினர். காங்கிரஸ் - லீக் உடன்படிக்கையின் அவசியத்தை அவர்கள் உணர்ந்தனர். அதனால், 20-5-38ல் அவர்கள் இருவரும் ஜனாப் ஜின்னா அவர்களைச் சந்தித்துத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். ஆனால், அவர்களுடன் சமரசம் பேசுவதற்கு லீக் தலைவர் மூன்று நிபந்தனைகள் விதித்தார். அவற்றுள் ஒன்று, வந்தே மாதர கீதம் காங்கிரசால் தேசீய கீதமாகப் பயன்படுத்தப்படுவது கைவிடப்பட வேண்டுமென்பதாகும். காந்தியடிகளும், சுபாஷும் இதற்கு இணங்க மறுத்தனர்.

## காந்தியடிகள் கருத்து

நாடு சுதந்திரம் பெற்றபின் இன்னொரு விதமான எதிர்ப்பு இந்துக்களிடமிருந்தே தோன்றியது. அப்



போது, ‘வந்தே மாதரம்’ ‘அல்லாஹு அக்பர்’ என்ற இரண்டு கோஷங்களையும் ஒருங்கே எழுப்பி வந்தனர் தேசபக்தர்கள். இந்து – இஸ்லாமிய மக்களிடையே நட்புணர்ச்சியை வளர்க்கும் பொருட்டே இந்தக் கூட்டுக் கோஷம் பிறந்தது. ‘வந்தே மாதரம்’ கோஷத்திற்கு முஸ்லிம் லீக் எதிர்ப்பு காட்டியதால், ‘அல்லாஹு அக்பர்’ கோஷத்திற்கு இந்துக்களில் ஒரு சாராரிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்பாளர்களுக்கு சமாதானம் கூறி 7 – 9 – 47 ‘அரிசன்’ இதழில் காந்தியடிகள் எழுதியது வருமாறு:

> “வந்தே மாதரம்” என்பது மத கோஷம் அல்ல; முற்றிலும் அரசியல் கோஷமேயாகும். அதை ஏற்றுக் கொள்ளுமுன் காங்கிரஸ் மகாசபை அதை நன்றாகப் பரிசீலனை செய்து குருதேவரிடமும் அபிப்பிராயம் கேட்டது. காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினர்களாயிருந்த முஸ்லிம்களும் இந்துக்களும் அந்தக்கீதத்தின் ஆரம்ப வரிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் கூற முடியாதென்று முடிவு செய்தார்கள். எல்லோரும் சேர்ந்து அதைப் பாடவேண்டும். ஒருநாளும் அதை முஸ்லிம்களை நிந்திக்கும் கருத்தோடு பாடக்கூடாது. வங்காளத்துக்கு தெரியூட்டிய கோஷம் அதுதான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதைக் கோஷித்துக் கொண்டு எத்த

னையோ வங்காளிகள் அரசியல் சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்திருக்கிறர்கள். "வந்தே மாதரம்" என்பது இந்தியத் தாயை வணங்கும் கீதம் ஆகும்.

"இந்துக்களில் சிலர் 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷத்தை ஆட்சேபித்திருக்கிறர்கள். ஆனால், அதைவிட உயர்ந்த கோஷம் ஒன்று இதுவரை உண்டாக்கப்பட்டிருக்கவில்லை என்பது என் திடமான நம்பிக்கை. ஆத்மாவைப் புனிதப்படுத்தும் கோஷம் ஆகும். 'கடவுளே பெரியவர்' என்பதுதான் அதன் பொருள். அந்தப் பொருளில் மகிமை இருக்கிறது. அரபு மொழியில் அந்தக் கோஷம் இருக்கிறது என்பதற்காக ஆட்சேபிக்கலாமா?" ("அரிசன்"–7 9 47)

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது விடுதலை வேட்கை மிகுந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் ரகசியமாக இந்தியாவிலிருந்து வெயேறி, அப்போது ஜப்பானியரின் ஆக்கிரமிப்பிலிருந்த பர்மாவில் தஞ்சம் புகுந்தார். அங்கு "இந்திய தேசீய ராணுவம்" (ஐ.என்.ஏ.) என்னும் பெயரில் ஜப்பானியரின் ஆதரவுடன் இந்தியாவில் புகுவதற்கான ராணுவம் ஒன்றைத் திரட்டியதும் நாடறிந்ததாகும். அந்த ராணுவத்திற்கு "ஜெய் ஹிந்த்" என்னும் கோஷத்தைக் கொடுத்தார் நேதாஜி. இதன் பொருள் "இந்தியா வெல்க" என்பதாகும். உலகப்



பெரும்போர் முடிவதற்குமுன்பே நேதாஜி துரதிர்ஷ்டவசமாக ஒரு விமான விபத்தில் காலமாகி விட்டார்.

உலகப் பெரும்போர் முடிந்ததும் ஐ என்.ஏயைச் சார்ந்த பெரும் தலைவர்களும் முக்கியவீரர்களும் பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டனர். இங்கு அவர்கள்மீது டெல்லி செங்கோட்டையில் வழக்கு நடைபெற்றது. நேருஜியும் அவர்கள் சார்பில் நின்று வழக்காடினர். பின்னர் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது. ஐ என்.ஏக்களின் வருகையால் "ஜெய் ஹிந்த்" என்னும் கோஷம் இந்தியாவில் செல்வாக்கு பெற்றது. பழைய வந்தேமாதர கோஷம் கொஞ்சம் பின்னுக்குப் போய் விட்டதென்றே சொல்லவேண்டும். இதனை காந்திஜி, நேருஜி போன்ற பெரும் தலைவர்கள் விரும்பவில்லை. ஆயினும், அவர்கள் மௌனம் சாதித்தனர்.

பாரதியாரின் வாரிசாக விளங்கிய காந்தியக் கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களும் "ஜெய் ஹிந்த்" என்னும் தலைப்பு தந்து ஒரு தனிப்பாடலைப் புனைந்தளித்தார். அதன் தொடக்க வரிகள் வருமாறு:

'ஜேய் ஹிந்த்' என்கின்ற
ஜீவனன் னுதம்
தேசத்தில் ஒற்றுமை
சேர்க்கின்ற கீதம்
பேய்கொண்ட தென்ன
நமைப்பிடித் தாட்டும்
பேத வுணர்ச்சியை
நாட்டைவிட் டோட்டும்."

தமது பாடலின் இறுதியிலே,

"'வந்தே மாதரம்'
பாடி வணங்கி
வாழ்த்திநம் அன்னையின்
வெற்றி முழங்கி
'தந்தோம், உன்றன்,
சுதந்திரம்' என்றே
தைரியம் சொல்வது
'ஜெய் ஹிந்த்' அன்றோ!"

என்று பாடி முடிக்கின்ருர் நாமக்கல் கவிஞர். இந்த இறுதிச் செய்யுளிலே 'வந்தே மாதரம்' — 'ஜெய் ஹிந்த்' ஆகிய இரண்டு கோஷங்களையும் சமரசப் படுத்துகின்ருர்.

'ஜெய் ஹிந்த்' கோஷத்தை காந்தியடிகள் உற்சாகமாக வரவேற்காததற்குக் காரணம் உண்டு. ஆம்; அது ஆயுதப் போரில் நம்பிக்கை கொண்டவர்களால், அந்நிய நாடு ஒன்றின் உதவியுடன் தாய் நாடான இந்தியாவுக்கு விடுதலை தேட விரும்பியவர்கள்ால் தோற்றுவிக்கப்பட்டதல்லவா? அன்னிய நாட்டின் உதவி கொண்டு ஆயுத பலத்துடன் போராடி தேசத்திற்கு சுதந்திரம் தேடுவதைக் காந்தியடிகள் அடியோடு வெறுத்தார் என்பது நாடறிந்ததாகும். ஆனல், நாடு சுதந்திரம் பெறும் தேதி வரை—ஏன்? சுதந்திரம் பெற்ற பின்னும் சில ஆண்டுகள் வரை— 'ஜெய் ஹிந்த்' என்னும் கோஷத்திற்கு மக்களிடையே நல்ல மதிப்பு இருந்தது.

## அ. நி. மன்றத்தின் முடிவு

அரசியல் சட்டத்தைத் தயாரித்தளித்த அரசியல் நிர்ணய மன்றத்திலே, இந்திய தேசிய கீதமாக பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலை ஏற்பதா, தாகூரின் 'ஜன கண மன' பாடலை ஏற்பதா என்பது பற்றி விவாதிக்கப்பட்டது. பேராசிரியர் சாக்சேனு என்பவர் 'வந்தேமாதரம்' பாடலையே தேசீயகீதமாக ஏற்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அப்போது 'ஜன கண மன' பாடலுடன் சம அந்தஸ்தில் வந்தே மாதரம் பாடலும் பயன்படுத்தப் படுமென்று உறுதி கூறப்பட்டது. அதன்பின், வந்தே மாதரத்தைக் கோரும் தீர்மானம் திரும்பப்பெறப் பட்டது.

அதுபற்றி அ. நி. மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது திரு. சேத் கோவிந்ததாஸ் என்ற உறுப்பினர் பேசியதாவது:

"தேசீய கீதம் பற்றிய பிரச்னையைப் பொறுத்த வரை, 'வந்தே மாதரம்' தேசீய கீதமாக இருக்கலாம்

என்று சொல்லுவேன். நம்முடைய சுதந்திரப் போராட்ட வரலாறு இந்த "வந்தே மாதரத்"துடன் தொடர்பு கொண்டுள்ளது.

"அதன் ராகம் பின்னணி இசைக்குப் பொறுத்த மற்றது என்று சொல்லப்படுமானல், அந்தக் குறை பின்னணி இசை வல்லுநர்களால் நிவர்த்திக்கப்படக் கூடும் என்று நான் நம்புகிறேன். மகாகவி சூர்தாஸ், மற்றும் மீராபாய் கிராமியப் பாடல்கள் ஒரு ராகத்தில் மட்டுமல்லாமல் பல ராகங்களிலும் பாடப்படுகின்றன.

"ஆகவே வந்தே மாதரம் பின்னணி இசைக்குப் பொருத்தமற்றது என்று எண்ணுவது தவறு. கவி களின் அரசரான ரவீந்திர நாத் தாகூரிடம் மதிப்பு செலுத்தாதவர் எவரும் இலர். 1911-ம் ஆண்டில் காலஞ்சென்ற 5-ஆம் ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு வருகை தந்தபோது "ஜன கண மன" இயற்றப் பட்டது. அந்தப் பாட்டு காலஞ்சென்ற மன்னருக்கு வாழ்த்து தெரிவிக்கின்றதே தவிர, இந்தியத் தாய்க்கு அல்ல. அப்பாட்டில் குறிப்பிடப்பட் டுள்ளவை எல்லாம் "பாரத் பாக்ய விதாதா" வைக் குறிக்கும். 'ஜெய் ராஜேஸ்வர்' (மன்னருக்கு ஜே) என்ற சொற்றொடர் யாரைக் குறிப்பிடும் என்பது தெளிவு. ஒரு குடியரசு நாட்டின் தேசீய கீதத்தில் எந்த ஒரு அரசருக்கும் நாம் வாழ்த்து தெரிவிக்க முடியாது என்பது விளங்கும். ஆகவே, "வந்தே மாதரம்" ஒன்றே நம்முடைய தேசீய கீதமாகக் கூடும்."



அடுத்து, திரு. விஸ்வம்பர் தயாள் திரிபாதி என்பவர் தெரிவித்த கருத்து வருமாறு:

"தேசீய கீதம் 'வந்தே மாதரம்' என்பதா அல்லது 'ஜன கண மன' என்பதா என்ற சர்ச்சை இருந்து வருகிறது. கடந்த 50 ஆண்டுகளாக நம்முடைய தேசீய கீதமாக விளங்கிய, நம்முடைய சுதந்திரப் போராட்டத்திற்கு ஒளிவிளக்காக விளங் கிய 'வந்தே மாதரம்' நம்முடைய நாட்டில் தேசீய கீதமாக விளங்கும் என்று நான் எண்ணு கிறேன்."

இந்த விவாதத்திற்குப் பிறகு 'வந்தே மாதரம்' பாடலை ஏற்கக் கோரும் தீர்மானம் திரும்பப் பெறப் பட்டது.

அரசியல் நிர்ணய மன்றத்தில் 1950 ஜனவரி 24-ல் இந்திய தேசீய கீதம் பற்றி அம்மன்றத்தின் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் கீழ்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

"தேசீய கீதம் பற்றிய பிரச்னை விவாதிக்கப்படா மல் இருக்கும் ஒரு விஷயமாகும். அந்தப் பொருளை அவை முன் கொணர்ந்து ஒரு தீர்மானம் வாயிலாக இந்த அவையின் முடிவை தெரியப்படுத்தலாம் என்று ஒரு சமயத்தில் எண்ணம் இருந்தது. தீர் மானம் வாயிலாக ஒரு கொள்கை பற்றி முடிவு எடுப் பதைவிட, தேசீய கீதத்தைப் பற்றிய ஓர் அறிக்கை யினை நான் அளிப்பதே சிறந்தது என்று பின்னர்

கருதப்பட்டது. அதற்கிணங்க நான் இந்த அறிக்கையை அளிக்கிறேன்.

"சந்தர்ப்பத்திற்கேற்ப தேவையான சொல் மாற்றங்களுடன் கூடிய ஜன கண மன என்று வழங்கப்படும் பாட்டு இந்தியாவின் தேசீய கீதமாக இருக்கும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற வகையில் பங்கு பெற்ற வந்தே மாதரம் பாட்டு அதற்குச் சமமாகப்பெருமைப்படுத்தப் படும். அதற்கு இணையாகக்கருதப்படும். இது உறுப்பினர்களுக்குத் திருப்தியளிக்கும் என்று நம்புகிறேன்."

அ. நி. மன்றம் செய்த முடிவுப்படி கவி. ரவீந்திரநாத்தாகூரின் 'ஜன கண மன' இந்தியாவின் அதிகார பூர்வமான தேசிய கீதமாக ஏற்கப் பெற்றது.

# முடிவுரை

விடுதலைப் போர் முடிந்த பிறகு வந்தே மாதர கோஷம் ஓய்ந்து விட்டது என்பது உண்மைதான். காங்கிரஸ்காரர்கள் நடத்தும் மாநாடுகளிலேயும், ஊர் வலங்களிலேயும், கூட்டங்களிலேயும் கூட வந்தே மாதரம் என்ற கோஷம் எழுப்பப்படுவதில்லை.

ஆயினும், அந்தத் தேசீய மகா மந்திரமானது இன்னமும் தனது சக்தியை இழந்துவிடவில்லை யென்று சொல்லலாம்.

திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பி. ஆர். பந்துலு அவர்கள், தமது பத்மினி பிக்சர்ஸ் சார்பில் "கப்பலோட்டிய தமிழன்" என்னும் பெயரில் வ. உ. சி.யின் வரலாற்றைத் திரைப்படமாக்கியது நாடறிந்ததாகும். அதிலே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கப்பலோட்டிய தமிழனுகவும், ஔவை, தி.க. சண்முகம், சுப்பிரமணியசிவாவாகவும் அற்புதமாக நடித்திருக்கின்றனர். கவிஞர் எஸ். டி. சுந்தரம்

திரை வசனம் எழுதினர். கதையமைப்புக் குழுவின் தலைவனாக நான் இருந்தேன்.

அந்தப் படத்திலே, வ. உ. சி. காலத்தில் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் வந்தே மாதரம் மந்திரத்திற்கிருந்த செல்வாக்கை விளக்கும் காட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தப் படத்தைப் பார்க்கும் மாணவர்களும் இளைஞர்களும் தியேட்டரை விட்டு வெளியே வரும்போது வந்தே மாதரம் என்று கோஷிப்பது வழக்கமாக இருக்கிறது. இதிலிருந்து தெரிவது என்ன?

தேசபக்தர்கள் திட்டமிட்டு முயல்வார்களானால், திரும்பவும் 'வந்தே மாதரம்' என்பது புத்துயிர் பெற்றுவிடும் என்பதல்லவா?

அது புத்துயிர் பெறுகிறதோ, இல்லையோ, இந்திய விடுதலைப் போர் வரலாறு பல வால்யூம்கள் கொண்ட நூலாக எழுதப்படும்போது, அதிலே, 'வந்தே மாதரம்' என்னும் மந்திரச் சொல்லின் வரலாறு ஒரு தனி வால்யூமாக எழுதப்பெறும் என்பதில் ஐயமில்லை.

1905 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த வங்கப் பிரிவினைச் சட்டமானது 1912ல் ரத்து செய்யப்பட்டதென்றால், அது, 'வந்தே மாதரம்' கீதத்துக்கும் கோஷத்திற்கும் கிடைத்த முதல் வெற்றியாகும். நாடு சுதந்திரம் பெற்ற 1947 ஆகஸ்டு 15-லே முடிவான வெற்றியும் கிடைத்து விட்டது. அத்துடன்



அந்தப் புரட்சிக் கீதமும், இந்திய மக்களால் மறக்கப்பட்டுவிட்டது. ஆயினும், நாள்தோறும் அதிகாலையில் அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சி தொடங்கும்போது, பங்கிம் சந்திரர் புனைந்த 'வந்தே மாதரம்' கீதத்தைக் கேட்க முடிகிறது. அது போதுமே!

வந்தே மாதரம்.

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர் ★ சென்னை-4

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.